SOUTHALL SHUTTERS (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

Asian Funeral Care Ltd.
Funeral Services
Welcome: International Transportation and DSS Claims
Tel: 020 8909 3030 (24 Hours)
(Sanjay L. Lodhia)
35 Kenton Park Parade, Kenton Road, Kenton Harrow, Middx. HA3 8DN (Next to Barclays Bank)

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk UN-27 Jan'03 For News & Advertising: 020 8952 5677 16 பக்கங்கள்

# தமிழ் மக்கள் செறிவான கவுன்சில் மட்டமானது ?

கவுன்சில்கள் பற்றிய மதிப்பீட்டில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் வோல்தம்ஸ்ரோ கவுன்சில் மட்டமான நிலையில் உள்ளது. டிசம்பர் 11ம் திகதி வைற்ஹோல் கண்காணிப்புக் குழு மட்டமான கவுன்சில்களின் பெயர்களை வெளியிட்டிருந்தது. அதில் ஹக்னி கவுன்சில் மோசமான நிலையிலும் வோல்தம்ஸ்ரோ, ஸ்லிங்ரன் கவுன்சில்கள் மட்டமான நிலையிலும் இருந்தது.

பள்ளிகள், கல்லூரிகளின் தரம், சிறுவர்களுக்கும் வயோதிபர்களுக்கும் வழங்கப்படும் சமூக சேவைகளின் தரம், மற்றும் நூலகங்கள், கவுன்சில் வீடுகள், நீரத் தடாகங்கள், விளையாட்டு மைதானங்கள், மண்டபங்கள் என்பன எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதைக் கொண்டுமே இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் வீட்டு நலக் கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவு மோசடிகள் என்பனவும் கவனத்தில் எடுக்கப்பட்டு இருந்தது.

## கவுன்சில் வரி மீண்டும் அதிகரிக்கிறது

கவுன்சில் வரி 10 வீதத்தால் அதாவது சராசரியாக £100 ஆல் அதிகரிக்கப்பட இருக்கிறது. இதனால் சாதாரண வருமானத்தில் சாதாரண வீட்டில் வாழ்பவர்கள் £1,000 க்கும் மேலாக கவுன்சில் வரி செலுத்த நிர்ப்பந்திக்கப்படுவதாக எதிர்க் கட்சியினர் குற்றம் சாட்டி உள்ளனர். தொழிற்கட்சி பதவி ஏற்ற பின்னர் கவுன்சில் வரி 40 வீதத்தால் அதிகரித்து இருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அடுத்த நிதி ஆண்டில் கவுன்சில்களுக்கு எப்படி நிதி வழங்குவது என்பதும் மாற்றப்பட இருக்கிறது. இதன்படி பொருளாதார வளமுடைய ரொறி கவுன்சில்களின் செலவில் பின்தங்கிய நிலையில் உள்ள தொழிற்கட்சி கவுன்சில்கள் நன்மை அடைய இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## ஐரோப்பியர்கள் தொகை 100 மில்லியனால் வீழ்ச்சி

அடுத்த 50 ஆண்டுகளில் ஐரோப்பியர்களின் எண்ணிக்கை 100 மில்லியனால் விழ்ச்சி அடைய உள்ளது. ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் மக்கள் தொகை அடுத்த 50 ஆண்டுகளில் 20 - 25 ஆல் வீழ்ச்சி அடைய இருக்கிறது. அறுபதுக்களில் 2.5 வீதமாக இருந்த பிரித்தானியாவின் பிறப்பு வீதம் தற்போது 1.64 வீதமாக குறைந்து உள்ளது.

1991 இலும் பார்க்க 2001ல் பிரித்தானியாவில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 125,000 ஆல் குறைந்து உள்ளது. இந்த வீழ்ச்சி இலண்டனில் வாழும் தமிழ் மக்களின் எண்ணிக்கைக்கு அண்ணளவாகச் சமனானது என்பது குறிப்பிடத்தக்கது. 2066ல் பிரித்தானியாவின் மக்கள் தொகை 3.8 மில்லியனால் வீழ்ச்சி அடைய உள்ளது. இது இலங்கையில் உள்ள மொத்த தமிழ் மக்களின் எண்ணிக்கைக்கு அண்ணளவாக சமனானது.

வளர்ச்சி அடைந்த நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் பிறப்பு வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்த ரஷ்யாவில் வறுமை, எய்ட்ஸ், மது ஆகியன பிறப்பு வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இன்னும் 10 ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகைக்கு ஒப்பான சனத்தொகை ரஷ்யாவில் மறைய உள்ளது. மாறாக வளர்முக நாடுகளைக் கொண்ட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சனத்தொகை தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இவர்களே வயதடைந்து வரும் அமெரிக்க, ஐரோப்பிய மக்கள் தொகையை தாங்குபவர்களாக அந்நாடுகளுக்கு புலம்பெயர்வார்கள்.

Coach Hire 020 8952 7775
35 பேர் வரை பயணம் செய்ய
Hall Hireக்கு 020 8905 7775

The International Wood Floor Centre
Laminate Flooring available in 6 colours
£4.95 sq.m + VAT only
Engineered Floors £14.99 + VAT only
Solid Floor £19.99 + VAT only
Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days Tel: 020 8951 4395 - 4495 Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

ALEAF WINDOWS LTD.
50% OFF Georgian Leaded Windows
FREEPHONE 0800 028 4747

BIRDY & CO
Solicitors
Legal Aid • Private
Immigration
Criminal
Landlord & Tenant
Matrimonial
Personal Injury
Civil Litigation
Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

A40 Wholesale Ltd.
Specialists in Wines, Beer, Spirits and Softdrinks
* FREE Delivery
* Special Instore Prices
* Credit Cards Accepted
* Open 7 Days
Unit 4
427 Long Drive
Greenford
Middx. UB6 8UH
(Behind B&Q)
Tel: 020 8578 5500
Fax: 020 8578 8889

C & S DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
HALF PRICE SALE AT
C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
எங்கள் கடைக்கு வந்து உங்கள் காசுகளை மிச்சப்படுத்துங்கள்
Fixed prices Best Prices
714-716 Kenton Road, Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sundays)
At very reasonable price Hall for Hire
Good facility near Alperton
TEL: 020 8903 6563

Palm Beach Restaurant
Fully Licenced Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm & 6.00 pm to midnight
10% Discount on PARTY ORDERS & EAT-IN over £50
Tel: 020 8900-8664 / 07939 587 338 / 020 8900 1990
Website: www.palmbeachuk.com
17 Ealing Road Wembley Midd... A0 4AA

Tyres • Exhaust • S. Absorbers • Brakes • Services
THE ALIGNMENT CENTRE
Specialist in Advanced Four Wheel Alignment
Unit 7
Sheraton Business Centre
Wadsworth Close
Off Wadsworth Road
Perivale UB6 7JD
Tel: 020 8998 7486
Fax: 020 8998 8615

CHARTERED PAUL & Co ACCOUNTANTS
Prompt & Friendly Service
Call for FREE first meeting
020 8427 2566

# இஸ்லாம் மேற்கிற்கு ஒரு பயமுறுத்தல் - சர்ச்சைக்குரிய விவாதம்

இஸ்லாம் மேற்கிற்கு ஒரு பயமுறுத்தல் என்ற தலைப்பில் கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஐக்கிய சமூகம் ஏற்பாடு செய்துள்ள விவாதம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. ஜனவரியில் திட்டமிடப்பட்டு உள்ள இவ்விவாதத்தில் தீவிர வலதுசாரி அமைப்பான பி என் பி தலைவர் நிக் கிறிபின் முதல் இஸ்லாமிய அடிப்படை வாதியும் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவராகக் கருதப்படும் சேக் அபு ஹம்சா அல் மஸ்ரியும் உரையாற்ற உள்ளனர். பல்லினத்துவம் பேச்சுச் சுதந்திரம் இவற்றின் அடிப்படையில் இவர்கள் பேச அனுமதிக்கப்பட்டாலும் இப்படியானவர்களின் உரைகள் இனப் பதட்டத்தையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தும் என சிறுபான்மை மாணவர் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

# வளர்ந்து வரும் சிறுபான்மையினர்

பிரித்தானியா மக்கள் தொகையில் வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட போதும் சிறுபான்மையினரின் சனத் தொகை அதிகரித்து வருகிறது. 1991ல் 5.6 வீதமாக இருந்த சிறுபான்மையினர், 2001ல் மக்கள் தொகையில் 8 வீதமாக அதிகரித்து இருப்பதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. அதாவது கடந்த 10 ஆண்டுகளில் சிறுபான்மையினர் சனத்தொகை 3.1 மில்லியனில் இருந்து 4.5 மில்லியனாக அதிகரித்து உள்ளது. இச்சிறுபான்மையினரில் இந்தியர்கள் அதிகமானவர்களாகவும் அவர்களைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்கள், கறுப்பின கரீபியர்கள், ஆபிரிக்க கறுப்பர்கள் மற்றும் கலப்பினத்தவர்களும் இடம்பெறுகின்றனர்.

சிறுபான்மை இனச் சமூகம் பெரும்பாலும் இளமையாகவும் வறியவர்களாகவும் வேலையற்றவர்களாகவும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் இச்சிறுபான்மையினத்தவர்களில் அரைவாசியினர் இலண்டனைச் சுற்றியே வாழ்கின்றனர். தலைநகரின் மூன்றில் ஒரு பிரிவினர் சிறுபான்மையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிள்ளை பள்ளி செல்லாவிட்டால் பெற்றோருக்கு அபராதம்

பள்ளிக்கு ஒழுங்கீனமாகச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோருக்கு £50 அபராதம் விதிக்கப்பட இருக்கிறது. அபராதம் கட்டத் தவறுபவர்கள் சிறை செல்ல வேண்டியும் வரலாம் என கல்விச் செயலர் சார்ள்ஸ் கிளார்க் தெரிவித்து உள்ளார். பிள்ளைகளை தொடர்ந்தும் ஒழுங்காக பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் வைக்கப்பட இருக்கிறது. மேலும் வீட்டில் இருந்தே பழக்க வழக்கங்கள் ஆரம்பிக்கப்படும் என்ற கருத்துப்பட பிள்ளைகளின் பழக்க வழக்கங்களிலும் பெற்றோர் கவனம் எடுக்க நிர்ப்பந்திக்கப்பட உள்ளனர். மேலும் உளவியலாளர்கள் நடத்தை நிபுணர்களை உள்ளடக்கிய 200 பேர் கொண்ட குழு நாட்டில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று வேண்டிய நிபுணத்துவ உதவிகளை வழங்க உள்ளது. இவற்றுக்காக அரசு 150 மில்லியன் பவுண்களை அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஒதுக்கி உள்ளது.

# கடன்களுக்குள் சிக்கும் ஏழைகள்

பிரித்தானியாவில் உள்ள முக்கிய வங்கிகளும் கடன் கொடுக்கும் நிறுவனங்களும் ஏழைகளை மேலும் கஸ்டத்திற்குள் தள்ளுவதாக New Economics Foundation அமைப்பு குற்றம்சாட்டி உள்ளது.

கடன் கொடுப்பவர்கள் அறிமுகப்படுத்தும் குறைந்த வட்டிவீதக் கடன்கள் எதுவும் வறுமைக் கோட்டில் £8,000 ஆண்டு வருமானத்தில் உள்ள 8 மில்லியன் மக்களுக்குக் கிடைப்பதில்லை என்று அவ்வமைப்பு குற்றம் சாட்டுகிறது. வசதி படைத்தவர்களுக்கே கடன்கொடுப்பவர்கள் கழிவுகளை வழங்குவதாகவும் அவ்வமைப்பு தெரிவிக்கிறது.

நத்தார் புதுவருட நன்நாட்களை முன்னிட்டு வறுமைக் கோட்டில் உள்ளவர்கள் கூடுதல் வட்டிக்கு கடனைப் பெற்று கடனை திருப்பிச் செலுத்த கஸ்டப்படப் போகிறார்கள் என்பதையும் அவ்வமைப்பு சுட்டிக் காட்டி உள்ளது. இது விடயத்தில் இந் நிறுவனங்களுக்கு எதிரான விதிமுறைகளை அரசு கொண்டு வரவேண்டும் எனவும் இவ்வமைப்பு ஆலோசணை வழங்கி இருக்கிறது.

# பலாத்காரத் திருமணங்கள்

பிரித்தானியாவில் வாழும் பங்களாதேஸ், பாகிஸ்தானிய முஸ்லீம் சமூகங்களின் மத்தியில் பலாத்காரத் திருமணங்கள் தொடர்ந்தும் ஒரு பிரச்சினையாக இருப்பதாக உள்துறை அமைச்சு தெரிவித்து உள்ளது. 2000 - '2002 வரை 450 பலாத்காரத் திருமணங்கள் இடம்பெற்றிருப்பதாக அவ்வறிக்கை குறிப்பிட்டு உள்ளது. பலாத்காரத் திருமணங்கள் குறைந்து வருவதாகக் குறிப்பிட்ட பிரபுத்தினி போலா மன்சிலா உடினின் அது பற்றி முறைப்பாடு செய்பவர்கள் தற்போது தைரியமாக முன் வருவதால் தான் எண்ணிக்கை அதிகமாகத் தெரிகிறது எனக் குறிப்பிட்டார்.

16 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளைகள் தமது தாய்நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பிறக்கும்போதே நிச்சயிக்கப்பட்ட மாப்பிளைக்கு அல்லது பலவந்தமாக மைத்துனர்களுக்கு மணம் முடிக்கப்படுவதாக உள்துறை அமைச்சின் அறிக்கை கூறுகிறது. இவ்வாறு பலவந்தமாக பிரித்தானியாவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட 75 பெண்கள் மீண்டும் பிரித்தானியாவுக்கு அரசின் உதவியுடன் அழைத்து வரப்பட்டு உள்ளனர். இரண்டு பெண்கள் பலாத்கார கருக்கலைப்பிற்கும் உட்படுத்தப்பட்டு உள்ளனர்.

# வீட்டு விலைகளில் நிச்சயமற்ற தன்மை

ரொக்கட் வேகத்தில் வீட்டு விலைகள் அதிகரித்து இருப்பது நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆபத்தாக அமைவதாக நிதி அமைச்சர் கோடன் பிறவுண் முதற் தடவையாக நவம்பர் இறுதி வாரத்தில் தெரிவித்து உள்ளார். வீட்டுச் சந்தை மந்தமடையாவிட்டால் வீட்டு விலைகளில் சடுதியான வீழ்ச்சி தவிர்க்க முடியாதது என நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். வீட்டு விலைகளின் அதிகரிப்பு இதே வீதத்தில் தொடர்ந்தும் இருக்காது என பாங்க் ஒப் இங்லண்டின் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். வீட்டுச் சந்தையின் நீண்ட கால எதிர்காலம் கலங்களாக இருப்பதாக அதன் உதவித் தலைவர் மேர்வின் கிங் தெரிவிக்கிறார். இவ்வாண்டு வீட்டுச் சந்தை மந்தமடையும் என நேஷன் வைட் வங்கி நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வங்கியின் நிபுணர்களில் ஒருவரான அலெக்ஸ் பனிஸ்ரர் வீட்டை வாங்கும் சக்தி வீட்டுச் சந்தையில் முறிவை ஏற்படுத்தும் என நம்புகிறார்.

# எங்கும் தொழிலாளர் பற்றாக்குறை

கணணி, மருத்துவத் தேர்ச்சியாளர்கள் மட்டுமல்ல கட்டிட மற்றும் தொழில்களுக்கும் பயிற்றப்பட்டவர்களின் பற்றாக்குறை நிலவுகிறது. ஸ்பெயினுக்கு அடுத்ததாக பிரித்தானியாவே அதிக அளவான உரிமையாளர்கள் வாழும் நாடாக உள்ளது. ஆனால் பிரித்தானியாவிலேயே குறைந்த அளவான பயிற்றப்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் உள்ளனர். தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்ய அடுத்த 5 ஆண்டுகளில் 40,000 பயிற்றப்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் தேவை என அரசு மதிப்பிட்டு உள்ளது. ஆனால் 2,500 பேரே புதிதாக பயிற்சிகளுக்கு கையெழுத்திட்டு உள்ளனர். இதே நிலையே குழாய் விநியோகத் (plumbing) தொழிலிலும் காணப்படுகிறது.

# தமிழர் உட்பட்ட சிறுபான்மை இனங்களின் தப்புத் தாளங்கள்

கறுப்பின மாணவர்கள் மற்றைய மாணவர்களைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக பாடசாலைகளில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். இதற்கு இனவாதம் மட்டுமல்ல அவர்களிடையே சரியான முன்னுதாரணங்கள் இல்லாமையும் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. லீட்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்வியியலாளர் ரொனி செவெல் (இவரும் ஒரு கறுப்பினத்தவர்) 15 வயதுடைய 150 கறுப்பின மாணவர்களை வைத்து மேற்கொண்ட ஆய்வில் அம் மாணவர்கள் தங்களால் ஆசிரியர்களை எவ்வளவு இலகுவில் பயமுறுத்த முடியும் என்பதில் பெருமைப்பட்டுக் கொள்வதாக தெரியவந்து உள்ளது. இனவாதத்திலும் பார்க்க இவர்களைச் சுற்றி உள்ள குழு அழுத்தங்கள் அவர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதாக அவ்வாய்வாளர் தெரிவித்து உள்ளார். பெரும்பாலும் இந்த காடைத்தனத் துணைக் கலாச்சாரம் அவர்களை அழிவு வழிக்கு இட்டுச் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

சிறுபான்மை இனங்கள் தங்கள் மத்தியில் உள்ள சமூகப் பிறள்வுகளுக்கு பொதுவாக இனவாதத்தை காரணம் காட்டும் போக்கு பிரித்தானிய தமிழ் சமூகத்தின் மத்தியிலும் காணப்படுகின்றது. தமிழ் சமூகத்தில் உள்ள சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வராத சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தமிழ் மக்களிடையே காணப்படும் வன்முறை, திட்டமிட்ட கிறடிற் காட் மோசடிகள் என்பவற்றுக்கு இனவாதச் சாயம் பூச முற்படுவதாக ஹரோவைச் சேர்ந்த யோகரட்ணம் தெரிவிக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக ஹரோவில் தான் வாழ்வதாகக் குறிப்பிட்ட அவர் இதுவரை எந்த இனவாதத்திற்கும் உட்படவில்லை என்றும் ஆனால் தனக்கு தமிழ் படம் பார்க்க போகவும் எம்மவர்கள் தொழில் புரியும் பெற்றோல் ஸ்ரேஷனில் கிறடிட்காட் கொடுக்கவும் தான் பயமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# வேகக் கமராக்களை மறைத்து வைக்க வழக்கு

வீதிகளில் காணப்படும் வேகக் கமராக்கள் ஓட்டுனர்களுக்கு இலகுவாகத் தெரியக் கூடியதாக இருப்பதாக சுற்றாடல் பாதுகாப்புவாதிகள் மேல் நீதிமன்றில் அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்து உள்ளனர். கமராக்களைக் கண்டவுடன் பிரேக்கை அழுத்திவிட்டு பின்னர் வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்வதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஏனைய குற்றச் சட்ட அமுலாக்கலில் குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கை வழங்கப்படாத போது எதற்காக ஓட்டுனர்களுக்கு மட்டும் அந்த எச்சரிக்கை வழங்கப்படுகிறது என்றும் சுற்றாடல் பாதுகாப்பு வாதிகள் கேட்கின்றனர். இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வும் கமராக்கள் எளிதில் தெரியாமல் வைக்கப்படுவதால் தான் வேண்டுமென்றே விரைவாக ஓட்டுபவர்களைத் தடுக்க முடியும் எனத் தெரிவிக்கிறது.

ஆண்டுக்கு 1,100 பேர் பிரித்தானிய விதிகளில் இறப்பதற்கு வேகம் காரணமாக இருக்கின்றது. கடந்த ஆண்டு 2 மில்லியன் ஓட்டுனர்கள் மீது வேகமாகச் சென்றதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. வாரத்திற்கு 15 புதிய கமராக்கள் வைக்கப்பட்ட போதும் ஓட்டோ கார் சஞ்சிகையின் கணிப்பில் 73 கமராக்கள் பாதுகாப்பான வீதிகளிலும் 18 கமராக்கள் மட்டுமே ஆபத்தான வீதிகளிலும் வைக்கப்பட்டு இருப்பதாக தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

ALLIED MOTORS U.K.
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Open: MON - FRI 8.30am to 7.00 pm
SAT 8.30am to 5.00pm
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

Graphical Impact
Signs ~ Designs ~ Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

NEW LIGHT HOUSE AUTO PLUS
WORKSHOP
MOT TEST CENTRE
Servicing Clutches, Brakes, Gearboxes, Engines, Exausts, etc.
Tel: 020 8520 0047
020 8521 3000
Fax: 020 8520 0048
72-73 Brunner Road, Walthamstow, London E17
FREE TYRE & BRAKE SAFETY CHECKS
All mechanical works undertaken unbeatable prices
Tyres, Exausts, Brakes, Part worn tyre specialists Balancing, Punctures, Tracking
Tel: 020 8521 9696
152a Hoe St., Walthamstow, London E17 (Corner of Hatherley Rd.)

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# சிக்கலுக்கு உள்ளான வங்கிக் கடன்

முதல் தடவை வீடு வாங்கியவருக்கு பிறிஸ்டல் அன் வெஸ்ட் வங்கி 110 வீதம் கடன் வழங்கியது கடும் கண்டனத்துக்கு உள்ளாகி உள்ளது. 5.69 வீதத்தில் 40 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட இக்கடனே கண்டனத்துக்கு உள்ளானது. வீட்டின் பெறுமதிக்கு மேலாக கடன் பெறுவது வீட்டு விலையில் வீழ்ச்சி ஏற்படும் போது பிரச்சினையை மோசமாக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# பெரும் தெருக்களை விஸ்தரிக்கத் திட்டம்

டிசம்பர் 10ம் திகதி பிரித்தானிய வீதிகளில் ஏற்பட்டு இருக்கும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த தெருக்களை அகலப்படுத்தும் திட்டத்தை போக்குவரத்துச் செயலாளர் அலிஸ்டர் டார்லிங் வெளியிட்டு உள்ளார். 3 பில்லியன் பவுண்கள் ஒதுக்கப்பட்டு உள்ள இத்திட்டத்தில் 1 பில்லியன் பவுண் பெரும் தெருக்களை அகலப்படுத்த பயன்படுத்தப்பட உள்ளது. இவற்றுடன் போக்குவரத்து நெரிசலை மட்டுப்படுத்த 1,600 திட்டங்கள் வரையப்பட்டு உள்ளது. மேலும் 400 சந்திகளை திருத்தி அமைக்கவும் ஏற்பாடாகி உள்ளது.

தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் துணைப் பிரதமர் ஜோன் பிரஸ்கோட் 100 வீதித் திட்டங்களை நிறுத்தியதாகக் குற்றம்சாட்டிய கொன்சவேடிவ் கட்சி கடந்த ஐந்தரை ஆண்டுகளை தொழிற்கட்சி விரயமாக்கி விட்டதாக குற்றம்சாட்டி உள்ளது.

# முரண்பாடு

பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயருக்கும் அவருடைய நிதி அமைச்சர் கோர்டன் பிரவுணுக்கும் இடையே கசப்புணர்வு ஏற்பட்டு வருவதாக தேசியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு உள்ளன. 18 ஆண்டுகள் கொன்சவேடிவ் ஆட்சிக்குப் பின் தொழிற்கட்சியை ஆட்சி பீடம் ஏற்றிய ரொனி பிளேயர் இரண்டு தடவைகள் பிரதமர் பதவியை பெரும்பான்மை பலத்துடன் தக்க வைத்துக் கொண்டார். கொன்சவேடிவ் கட்சி தொடர்ந்தும் உறங்கு நிலையிலேயே இருப்பதால் மூன்றாவது தடவையும் தொழிற்கட்சி வெற்றி பெறும் சாத்தியம் உள்ளது. மூன்றாவது தடவை பிரதமர் பதவி தனக்கு வர வேண்டும் என்று கோர்டனிடம் எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆனால் அதனை விட்டுக் கொடுக்க பிளேயர் தயாராக இல்லை என்பதும் பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

# யானைக்கு செருப்பு

திருவனந்தபுர ஆலய நிர்வாகிகள் ஆலய யானைக்கு பெரிய பாத அணிகளை செய்விக்க உள்ளனர். யானையின் பாதங்களில் ஏற்படும் வலியைக் குறைக்கவே இப்பாத அணிகள் செய்விக்கப்படுகிறது. ரபரும் லெதரும் கொண்டு இரு வினைஞர்கள் அழைக்கப்பட்டு கணேசனுக்கு இந்தப் பாத அணிகள் விசேடமாக தயாரிக்கப்படுகிறது. கிருஷ்ணர் ஆலயத்தில் வாழும் இந்த 76 வயது யானை ஆலய பவணிகளின் போது தனது பாத அணிகளை கழற்றி விட்டு சேவையில் ஈடுபடும்.

# கடிதம் எழுதிச் சாதனை

இந்தியர் ஒருவரின் கூடுதலான கடிதங்கள் தேசியப் பத்திரிகையில் வெளிவந்து சாதனை படைத்து உள்ளது. சுபாஸ் சந்திரா அகர்வால் என்பவரின் 1226 கடிதங்கள் தேசியப் பத்திரிகைகளில் பிரசுரமாகி உள்ளது. 53 வயதான சுபாஷ் 1967ல் இருந்து பத்திரிகை ஆசிரியர்களுக்கு கடிதங்கள் எழுதிவருகிறாராம். ஆனால் இலண்டனில் சிலர் மொட்டைக் கடிதம் எழுதுவதிலும் பெட்டிசம் போடுவதிலும் சாதனை படைக்கத் தயாராகி வருவதாக எமக்குத் தெரியவருகிறது.

# பூமியின் காந்தப்புலம் மறையும் ஆபத்து

பூமியினது இயற்கைக் காந்தப்புலம் மறையும் ஆபத்து தென்படுவதாக புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சூரியனில் இருந்து வெளிப்படும் ஆபத்தான கதிர்களை தெறிப்படையச் செய்யும் இந்தக் காந்தப்புலம் வலிமை குன்றினால் அல்லது மறையும் ஆபத்து ஏற்பட்டால் சூரியனில் இருந்து வரும் ஆபத்தான கதிர்கள் பூமியை வந்தடையும். மேலும் காந்தப்புலத்தைப் பயன்படுத்தி குடிபெயரும் விலங்குகளும் இதனால் மிகவும் பாதிப்படையும். கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் காந்தப்புலத்தின் வலிமை சடுதியாக வீழ்ச்சி அடைந்திருப்பதாக பாரிஸ் புவியியல் நிறுவன ஆய்வாளர் தெரிவிக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில் அடுத்த ஆயிரம் ஆண்டுகளில் காந்தப்புலம் முழுமையாக மறைந்து விடும் என்றும் தெரிவித்தார்.

# பௌர்ணமி இப்படியும் செய்யத் தூண்டும்

பௌர்ணமியில் சந்திரனில் இருந்து வெளிப்படும் வித்தியாசமான சில்வர் ஒளிக்கீற்று சிலரின் நடத்தையில் வழமைக்கு மாறான மாற்றத்தை ஏற்படுத்துவதாக கிங்ஸ் கல்லூரி மருத்துவமனை ஆய்வாளர் டொக்டர் கிலன் வில்சன் தெரிவிக்கிறார். நடத்தைகளில் சந்திரனின் செல்வாக்குப் பற்றி ஆய்வு செய்த இவர் இது ஒரு வானியல் சக்தி அல்ல என்றும் குறிப்பிட்டார். இதே போன்று அமெரிக்க ஆய்வில் முழுநிலாக் காலத்தில் கொலைகள் மூன்று மடங்காக அதிகரிப்பதும், உளவியல் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதும், தீ வைப்புச் சம்பவங்கள் 100 வீதத்தால் அதிகரிப்பதும் தெரியவந்து உள்ளது. இந்த முழு நிலவு நடத்தைக் குழப்பத்தை lycanthropy என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# சூழலுக்கு இசைவான கார்கள்

சுற்றாடலை மாசடையச் செய்யாத புதிய வகைக் கார்கள் பரிசோதணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. ஐதரசனை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் இந்தக் கார்கள் நீராவியை மட்டுமே வெளியேற்றுகின்றன. மாதம் 6,400 பவுண்கள் வாடகைச் செலவுடைய இவ்வகைக் கார்களை பரிசோதிப்பதில் ரொயாற்றா மற்றும் ஹொண்டா நிறுவனங்கள் ஈடுபட்டு உள்ளன. உலகம் வெப்பமடைதலைக் கட்டுப்படுத்தும் இக்கார்கள் மிக இலகுவில் எரியக் கூடிய ஐதரசனை எரிபொருளாகக் கொண்டிருப்பதால் மிகவும் ஆபத்தானவை எனக் கருதப்படுகிறது. அதனால் இதனைத் தடுப்பதற்கு விலையுயர்ந்த பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை உற்பத்தியாளர்கள் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. இருந்தாலும் இன்னும் 15 ஆண்டுகளில் ஐதரசன் கலங்களில் இயங்கும் நியாயமான விலைக் கார்களை உற்பத்தி செய்வதில் ஜப்பானிய கார் நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

# பறக்கும் கார்கள்

இன்னும் மூன்று ஆண்டுகளில் பறக்கும் கார்களை அறிமுகப்படுத்தும் கண்டு பிடிப்பினை ஹொலண்டில் உள்ள ஸ்பார்க் டிசைன் இன்ஜினியேர்ஸ் நிறுவனம் வடிவமைக்க உள்ளது. ஐரோப்பாவின் நெரிசல் நிறைந்த தெருக்களை உடைய ஹொலண்டிற்கு இவ்வகையான பறக்கும் கார்கள் கனவுகள் நினைவாவது போன்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. சாரதி அல்லது ஓட்டியுடன் இரண்டு பயணிகளை ஏற்றக் கூடிய ஹெலிக்கொப்ரர் வடிவில் அமைந்த இக்கார்கள் ஓட்டோகொப்ரர் என அழைக்கப்படுகின்றன. 2000 அடி உயரத்தில் 300 மைல்கள் பறக்கக் கூடிய இக்கார்களை சாதாரண பெற்றோல் நிலையங்களில் நிறுத்தி எரிபொருள் நிரப்ப முடியும்.

பொலிஸார், மருத்துவர்கள், மருத்துவ வண்டி சேவையினர், துரித விநியோக நிறுவனங்கள், வர்த்தகப் பிரிவினர் ஆகியோரே 50,000 பவுண் பெறுமதி உள்ள இவ் ஓட்டோகொப்ரர்களின் முதற் பாவனையாளர்களாக ஆக உள்ளனர். இதற்கு முன்னரும் இவ்வகையான கார்கள் வடிவமைக்கப்பட்டாலும் ஓட்டோகொப்ரர்களே அதில் வெற்றி நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நவீன பூச்சாடிகள்

புறுனல் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் புதிய கணணிப்படுத்திய பூச்சாடி ஒன்றை வடிவமைத்து உள்ளார். இப்பூச்சாடி அதில் உள்ள மண்ணின் நீர்த்தன்மையை தொடர்ந்து பரிசீலித்து வறட்சியை அவதானித்து வீட்டுக்காரருக்கு இசையாகவோ அல்லது ஒரு சிவப்பு ஒளியாகவோ தண்ணீர் இல்லை எண்பதைத் தெரிவிக்கும். இவ்வீட்டுக்காரர் விடுமுறையில் போயிருக்கும் போது தண்ணீர் பாச்சுவதற்கு வசதியாக அப்பூச்சாடி தொலைபேசியுடன் இணைக்கப்பட்டு குறிப்பிட்ட இலக்கங்களை அழுத்துவதன் மூலம் தொலைதூரத்தில் இருந்தவாறே வீட்டில் உள்ள பூச்சாடிக்கு நீர் பாய்ச்ச முடியும்.

## சூழலை மாசுபடுத்தும் மரங்கள்

சில வகையான மரங்கள் சூழலை மாசுபடுத்துவதாக லங்காஸ்ரர் பல்கலைக் கழக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. ஓக், பொப்லர், 3 வகையான விலோ மரங்கள் ஓசோனை வெளியேற்றி சூழலை மாசுபடுத்துவதாக ஆய்வு தெரிவிக்கிறது. இவ் ஓசோன் காபனீரொட்சைட்டுடன் இணைந்து மாசடைதலை ஊக்குவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வகையான மரங்களை வெட்டுவதால் இப்பிரச்சினை மேலும் மோசமாகும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மரங்களை வெட்டினால் வெப்பநிலை அதிகரிக்கும் அது ஓசோன் உருவாவதைத் தூண்டும். அதனால் சுழலை சுத்திகரிக்கக் கூடிய மரங்களை நடுவதே அதற்குத் தீர்வு என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையர்கள் திருப்பப்பட்டனர்

செங்கடலை இயந்திரப் படகில் கடந்து கொண்டிருந்த 161 இலங்கையர்களை திருப்பி அனுப்பும்படி எகிப்திய அதகாரிகள் பணித்துள்ளனர். இலங்கையில் இருந்து குடிபெயர்ந்த இந்த 161 பேரும் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்ததும் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட உள்ளனர். அதற்கா விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.

## தமிழகக் கலைஞர்கள் இலண்டன் விஜயம்

தமிழக இசைக் கலைஞர்கள் குழு ஒன்று ஜனவரி நடுப்பகுதியில் இலண்டன் வர இருக்கிறது. ஜனவரி 19ம் திகதி வோல்தம்ஸ்ரோ ரவுன் ஹோலில் இவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்க உள்ளனர். ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கும் இவ்விழாவில் திரைஇசை, நடனம், கதாகாலேட்சபம் என பல்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கிறது.

*F/h Shop with 2 Bed Flat*
CONVENIENT STORE + Off-Licence
POST OFFICE *(7 miles from Croydon)*
FOR SALE
Takings - 5,000
P.O. Salary - 16,000
£ 230,000
Tel: 01883 343692

Coach Hire

35 இருக்கைகள் கொண்ட கோச் வாகனம் வாடகைக்கு உள்ளது. சீட் பெல்ட் மற்றும் டிரைவர் வசதியுடன் கிடைக்கும். மேலதிக விவரங்களுக்கு உடனே அனுகவேண்டிய தொலைபேசி எண்
020 8952 7775

இறையருள் அரசி அன்னை காயத்ரி

வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் 020 8952 7775

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# தமிழீழ விடுதலைப் போரின் தியாகச் சுடரில் குளிர்காயும் சமூக விரோதிகள்

இலண்டனில் தமிழ் சமூகத்திடையே புல்லுருவிகளாக முளைத்துவிட்ட சமூகவிரோத சக்திகள், தமது துரோகத்தனங்களை மறைத்துக் கொள்ள தங்களை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆதரவாளர்களாகக் காட்டிக்கொள்ளுகின்றனர். விடுதலைப்போரில் உயிர் நீத்த பதினேழாயிரத்துககும் மேற்பட்ட போராளிகளினதும் பல்லாயிரக்கணக்கான மக்களதும் தியாகச்சுடரில் ஜெயதேவன் போன்ற சமூகவிரோதிகள் குளிர்காய முற்பட்டு உள்ளனர். மோசடிகள், நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியவற்றினால் மக்கள் முன் அம்பலப்பட்டு நிக்கும் இந்தச் சமூகவிரோதக் கும்பல் தங்கள் பச்சோந்திதத்தனத்தை மறைக்க புலித்தோல் போர்த்திக் கொள்கின்றனர்.

இதன் வெளிப்பாடே மொட்டைக் கடிதங்கள், துண்டுப் பிரசுரங்கள், மொட்டைப் பத்திரிகைகள் (ஆசிரியர், நிருபர் இல்லாத அல்லது பொய்ப் பெயர்களில் பதுங்கி எழுதும் பத்திரிகை) ஆகியன. கால்நூற்றாண்டாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவர் பிரபாகரனதும் அவ்வமைப்பின் முக்கியஸ்தர்களதும் படத்தை முன்பக்கத்தில் போட்டுவிட்டு உள்ளே சமூக விரோதி ஜெயதேவனும் சுற்றியுள்ள சமூகவிரோதக் கும்பலும் தங்கள் துரோகத் தனங்களுக்கு சாயம் போட்டு உள்ளனர். செயரிட்டி அமைப்புகளில் சுருட்டியதையும், ஈழபதீஸ்வரர் ஆலய உண்டியலை வீட்டுக்கு கொண்டு சென்று பின்னர் கோயிலையே குடும்பச் சொத்தாக்கிய சமூகவிரோதி ஜெயதேவன் மைத்துனர் சௌந்தர்ராஜன் போன்றவர்கள் ஊழல்தேவன் என்ற தங்களது சமூக அடையாளத்தை மாற்ற பல வழிகளிலும் முயற்சிக்கின்றனர். "இந்த சமூகவிரோதிகள் தமது கடைசி ஆயுதம் இருக்கும் வரை போராடி தங்களை தக்க வைத்துக் கொள்வார்கள்" எனத் தீபம் தொலைக்காட்சியில் கருத்துக் களம் நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்த வானொலி நிகழ்ச்சி முன்னிலையாளர் வி சிவலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இப்படியானவர்கள் பொது அமைப்புகளில் பதவிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படக் கூடாது என்றும் தெரிவித்தார்.

தங்கள் திருகுதாளங்களை மூடிமறைக்க தாயகத்தில் அனாததைக் குழந்தைகளுக்கு பணம் அனுப்பினோம், வன்னியில் மாணவர்களுக்கு கணணிகள் வாங்கிக் கொடுத்தோம், கைது செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பணம் கொடுத்தோம் ....... என்று பீற்றிக் கொள்ளும் இந்தப் பட்டியல் நீள்கிறது. தாம் சுருட்டியது போக மிஞ்சிய சிறிதை அனுப்பி விட்டு அலுவலர்களுக்கு கள்ளக் கணக்குக் காட்டி மக்களுக்கு இவர்கள் காது குத்துவது மக்களுக்கும் ஓரளவு தெரியும். ஆனால் இந்த சமூகவிரோதிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆதரவாளர்களாக தங்களைக் காட்டிக் கொள்வதால் மக்ஙளின் பார்வையில் இருந்தும் ஊடகங்களின் பார்வையில் இருந்தும் தப்பிக் கொள்கின்றன. இது இப்படியே தொடர அனுமதிக்கப்பட்டால் விடுதலைப் போராட்டத்தை கறைபடுத்திய அவப்பெயர் இலண்டன் தமிழர்களுக்கு ஏற்படும்.

கள்ள மட்டையில் பிடிபட்டவர்கள் தாங்கள் பழியில் இருந்து தப்புவதற்காக, தாங்கள் போராட்டத்துக்கு பணம் சேர்க்கவே இப்படிச் செய்தோம் என்று பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தனர். இதன் முடிவு பார்க்கிளேயஸ் வங்கி புலிகளையும் கள்ள மட்டையையும் தொடர்புபடுத்தியது. செயரிட்டி அமைப்புகளிலும் ஆலயங்களிலும் உள்ள ஜெயதேவன் போன்ற சமூகவிரோதிகளும் இதனையே செய்து போராட்டத்தை கேவலப்படுத்துகின்றனர்.

இலண்டனில் தமிழ் மக்களின் சமூகமேம்பாட்டுக்கு அரசு அல்லது அரசசார்பற்ற அமைப்புகள் வழங்கிய பணத்தை சில தமிழர் பொது அமைப்புகள் மோசடி செய்கின்றமை கடந்த உதயன் இதழ்களில் அம்பலப்படுத்தப்பட்டது. மேலும் வெம்பிளி ஈழபதிஸ்வரர் ஆலயத்திற்கு பொது மக்களாலும் செல்வந்தர்களாலும் வியாபாரத்தில் வெற்றி அடைந்தவர்களாலும் தாயக மக்களுக்காக நன்கொடையாக வழங்கப்பட்ட £100,000 கணக்கு மோசடி செய்யப்பட்டதையும் நாம் அம்பலப்படுத்தி இருந்தோம். TR-TEC - LCT நிறுவனங்களில் எழுந்த ஊழல் பிரச்சினையையும் மக்கள் முன் வைத்திருந்தோம். பத்திரிகைக்கு உள்ள அனைத்து உரிமைகளையும் பயன்படுத்தி தமிழ்மக்களின் சமூகமேம்பாட்டை ஒட்டுண்ணிகளாக உறிஞ்சிக் கொள்பவர்களை அம்பலப்படுத்துவோம். எமது செயற்பாட்டைத் தடுக்க மேற்கொளடளப்படும் மொட்டைப் பத்திரிகைகள் - கடதாசிகள், தொலைபேசி மிரட்டல்கள், கொலைப் பயமுறுத்தல்கள் எல்லாவற்றையும் வழமைபோல் எமது பேனா முனையால் சிதறடிப்போம். சூரியனை ஒருபோதும் நாயால் கவ்வ முடியாது.

# செயரிட்டிகளை சுருட்டுபவர்கள் கூட்டுச் சேர்வு - கவுன்சிலர் போல் சத்தியநேசன் குற்றசாட்டு



கவுன்சிலர் போல் சத்தியநேசன்

உதயன் பத்திரிகையின் மூலம் ஏற்கனவே அம்பலப்படுத்தப்பட்டவர்களும், விசாரணைகளுக்கு உட்பட்டு உள்ளவர்களும் திருட்டுக் கூட்டணி அமைத்து வருகின்றனர். இவர்கள் எல்லோருக்கும் வெள்ளைச் சாயம் பூசும் வேலையில் துண்டுப்பிரசுரங்கள், மொட்டைப் பத்திரிகைகள் தயார் நிலையில் உள்ளது.

தமிழர் வீட்டுவசதிக் கழகத்தின் நிர்வாகத் திறனற்ற செயலாளராக நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டவரும், ஈழபதீஸ்வர் ஆலயத்தின் £100,000 பண மோசடியில் சம்பந்தப்பட் ஜெயதேவன் மீது TCHA நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் தலைவர் ராம்ராஜ்ம் அவ்வமைப்பின் அறக்கட்டளை உறுப்பினர்களும் இந்த மோசடிகள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு ஜெயதேவனுக்கு ஆதரவாக இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

TR-TEC - LCT நிறுவனங்களின் £500,000 கணக்கை அந்நிறுவனத்தின் பொருளாளராக இருந்த எம் கனகராஜா ஏன் பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்பதை அந்நிறுவனத்தினர் இன்னமும் எமக்குத் தெரியப்படுத்தவில்லை. அதனை வழங்க வேண்டிய பொறுப்பு தலைவர் ரகுராஜ்ற்கும் முகாமையாளர் சிறிதரனுக்கும் உண்டு. தனது எண்பதுக்களில் உள்ள தற்போதைய கணக்கியல் அனுபவமற்ற திரு எஸ் வி மூர்த்தியை பொருளாளராக நியமித்தமை கணக்கு வழக்குகளை இருட்டடிப்புச் செய்யவே என குற்றச்சாட்டை முன் வைத்தவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வளவு குற்றச்சாட்டுக்குப் பின்னரும் நிர்வாகம் மாற்றப்படாமல் இருப்பது நிர்வாகத்தின் பொறுப்பற்ற நம்பிக்கையற்ற தன்மையை காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒரே உறுப்பினர்கள் TCHA, TR-TEC - LCT ஆகிய இரு அமைப்புகளிலும் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வமைப்புகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட்டதை அடுத்து இவர்கள் கூட்டுச் சேர்ந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சீர்கேடான உறுப்பினர்கள் பல அமைப்புகளில் இருப்பது தமிழ் அமைப்புகள் ஸ்தாபனரீதியாக மோசடியானவையாக மாற்றப்படுவதற்கு வழிவகுத்து வருகிறது. இவ்வமைப்புகள் அனைத்தும் தமது முழுமையான கணக்கு விபரங்களை மக்களுக்கு சமர்ப்பிக்கத் தயாராக வேண்டும் இல்லாவிட்டால் இவர்கள் மோசடியில் சம்பத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதே உண்மை என நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் குறிப்பிட்டு இருந்தார்.

# 33,000 பேர் பிரித்தானியாவில் எய்ட்ஸ் வைரசை காவுகிறார்கள்

பிரித்தானியாவில் 33,000 பேர் எய்ட்ஸ் நோயுடன் வாழ்வதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இதில் 11,000 பேர் வரை தாங்கள் எய்ட்ஸ் வைரஸை காவுகிறோம் என்பதைத் தெரியாமலேயே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் எய்ட்ஸ் நோயுடையவர்கள் 12,452 பேர் மரணமடைந்ததாக பதிவு செய்யப்பட்டு உள்ளது. வழமையாக தன்னினச் சேர்க்கையாளர்கள் மத்தியில் பொதுவானதாகக் கருதப்பட்ட இந்நோய் தற்போது 55 வீதம் ஈரினச் சேர்க்கையாளர்களால் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனை அடுத்து 32 வீதம் தன்னினச் சேர்க்கையாளர்களால் கடத்தப்படுகிறது.


SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

HOMOEOPATHIC HEALTH CLINIC
* For Consultation and Medicines
* For your full confidential Lady Consultant
* 10% Discount with this Advertisement
Tel: 020 8574 4281
Fax: 020 8843 9220
159, The Broadway, Southall, Middx. UB1 1LP (UK)

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு 020 8952 5677

FUNTASIA
The Party Shop

BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

Venous Alternative Medical Centre
Traditional Acupuncture and Massage Treatment

Dr. Prabakaran, DAC, MD, PhD
Fully Qualified and Experienced Doctor
Available on CALL
* Reasonable Rates For Treatment of:
* Acne * Asthma * Common Cold * Hay Fever * Arthritis
* Sinus * Migraine * Sports Injuries * Lower Back Pain
* Stiff Neck * Frozen Shoulder * Skin Beauty * Sciatica
* Headache *Facial Paralysis *Motor Neurone Disease * Obesity
***Free Initial Consultation***
முழுமையான தகுதியும் இலங்கை அரசு மருத்துவமனையில் மிகுந்த அனுபவம் பெற்ற மருத்துவர், அழைப்பின் பேரில் தங்கள்
இல்லத்திற்கே வந்து சிகிச்சை அளிப்பார்.
அழைக்க வேண்டிய தொலைபேசி எண் 07986 585456

# உலக அழகிப் போட்டி

**தேவதூதர் மொகமட் அழகி ஒருத்தியை மனைவியாக்கியிருப்பார்.**

## 215 பேர் மரணம் 11,000 பேர் வீடிழந்தனர்

நைஜீரியாவில் நடைபெற இருந்த உலக அழகிப் போட்டி 215 பேரின் மரணத்துக்கு வித்திட்டதுடன் 11,000 பேர் வீடிழந்தும் உள்ளனர். நைஜீரியாவில் அழகிப் போட்டி ஆரம்பத்தில் இருந்தே சிக்கலுக்கு உள்ளானது. நைஜீரியாவில் முஸ்லீம்கள் அதிகம் வாழும் வடபகுதியில் இஸ்லாமியச் சட்டமான ஷறியா அமுலில் உள்ளது. திருமண பந்தத்திற்கு வெளியே தாய்மை அடைந்த பெண்ணை கல்லெறிந்து கொல்லும் படி அச்சட்டம் தீர்ப்பளித்ததை அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் நைஜீரியாவில் அழகிப் போட்டி நடத்துவது விமர்சனத்துக்கு உள்ளானது. போட்டிகளை சில அழகிகள் பகிஸ்கரித்தனர்.

இதற்கிடையே தலைநகர் லாகோஸில் வெளியான பத்திரிகை ஒன்று தேவதூதர் மொகமட் உயிருடன் இருந்திருந்தால் அவர் இந்த போட்டிக்கு வந்த அழகிகளில் ஒருத்தியை தான் பெரும்பாலும் தனது மனைவியாகத் தெரிந்தெடுத்திருப்பார் என்று தனது கட்டுரையில் தெரிவித்து இருந்தது. இஸ்லாமிய அதிகாரிகள் அந்த ஊடகவியலாளருக்கு பட்வா - மரண தண்டனை விதித்ததனர். அதனை அடுத்து வடக்கு நைஜீரியாவில் இடம்பெற்ற கலகங்களில் 215 பேர் உயிரிழந்து உள்ளனர். 11,000 பேர் வீடிழந்து உள்ளனர்.

# இலங்கையில் எய்ட்ஸ்

இலங்கையில் எய்ட்ஸ் நோயாளிகளில் 95 வீதமானவர்கள் தாங்கள் எய்டஸ் வைரசை காவுகிறோம் என்பதை அறியாமலேயே இருப்பதாக எய்ட்ஸ் தடுப்பு கூட்டமைப்பு தெரிவிக்கிறது. சமூகம் எய்ட்ஸ் நோயாளிக்குக் காட்டும் பாரபட்சமும் அந்நோய் பற்றிய இழிவான சமூகப்பார்வையும் பாதிக்கப்பட்டவர்களை சிகிச்சை எடுக்க விடாமல் தொடர்ந்தும் மறைந்து வாழத் தூண்டுகிறது. இலங்கையில் 7,200 பேர் எய்ட்ஸ் வைரசைக் கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் 425 பேர் மட்டுமே பதிவு செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக சிகிச்சை எடுத்து வருகின்றனர். 2002ம் ஆண்டு எய்ட்ஸ் தினம் வாழுங்கள் வாழவிடுங்கள் என்ற கோசத்தை முன் வைத்து உள்ளது. எய்ட்ஸ் நோயாளிகள் மருத்துவ மனைகளிலும் வேலை இடங்களிலும் பொதுவாக சமூகத்திலும் ஒதுக்கப்படுவது, தனிமைப்படுத்தப்படுவது பாரபட்சமாக நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என சர்வதேச எய்ட்ஸ் தினத்தில் கேட்கப்பட்டு உள்ளது.

# இந்திய முஸ்லீம்களுக்கு குரல் கொடுக்கிறார் சோனியா காந்தி

"ஏனைய நாடுகளைக் (இந்தோனேசியா தவிர) காட்டிலும் இந்தியாவில் அதிக முஸ்லீம்கள் உள்ளனர். அதே போல் ஏனைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் அதிக இந்துக்கள் உள்ளனர். கிறிஸ்தவம் என அடையாளம் காணப்பட்ட ஏனைய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் அதிக கிறிஸ்தவர்கள் உள்ளனர். ஆனால் இந்தியா ஒரு இந்து நாடு அல்ல. ஒரு முஸ்லீம் நாடு அல்ல. ஒரு கிறிஸ்தவ நாடும் அல்ல. அது அனைவருக்கும் சொந்தமானது." என இந்தியக் காங்கிரஸ் கட்சியின் இத்தாலியில் பிறந்த தலைவி சோனியா காந்தி தெரிவித்தார். டிசம்பர் முதல் வாரத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமியக் கல்வி மையம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திலேயே அவர் Conflict and Coexistence in Our Age என்ற இந்த உரையை வழங்கினார்.

பயங்கரத்தை இன்னொரு பெரும் பயங்கரத்துடன் போராடக் கூடாது என்று தனது உரையில் குறிப்பிட்ட சோனியா இஸ்லாம் இந்திய நாகரீகத்தில் பல வழிகளிலும் செல்வாக்கு செலுத்தியதை நினைவு கூர்ந்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் சர்வதேச பயங்கர வாத வலைப்பின்னல் இந்திய முஸ்லீம்களில் தங்கி இருக்கவில்லை என்று குறிப்பிட்டதுடன் அதற்கு இந்திய அரசியல் சமூகக் கட்டமைப்பின் பல்லினத் தன்மையும் அளவீடுகளும் தான் காரணம் எனக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்திற்கு மதம் இல்லை எனக் குறிப்பிட்ட சோனியா மிகவும் நுட்பமான ஆயுதங்களுடன் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல், இனக் குழுக்களின் ஒரு பகுதி மத்தியத்துவப்படாத பயங்கர வாதத்துடன் காணப்படுவதே இன்றைய புதிய நூற்றாண்டில் உலகம் எதிர் நோக்கும் பிரச்சினை என அவர் குறிப்பிட்டார். பயங்கரவாதத்தின் வேர்கள் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் அடையாளம் காணப்பட வேண்டும் என்று குறிப்பிட்டதுடன் வறுமையைப் போல் செல்வச் செழிப்பும் பயங்கரவாதத்திற்கு வித்திடும் எனக் குறிப்பிட்டார். உலகமயமாக்கல் சமத்துவமின்மையை கொண்டிருப்பதுடன் கலாச்சார ஸ்தீரமின்மையை ஏற்படுத்தி பயங்கரவாதத்திற்கு வித்திடுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். அமெரிக்கா எவ்வளவு பெரும் வல்லரசாக இருந்தாலும் இது விடயத்தில் அது தன்னிச்சையாக செயற்பட முடியாது என்றும் சோனியா சுட்டிக் காட்டினார். சோனியாவின் அரசியல் வாழ்வில் அவர் பேசிய முக்கிய உரையாக இது அமைந்திருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# பிரித்தானியாவில் வாழும் தென்னாசியர்கள் மத்தியிலும் எய்ட்ஸ்

பிரித்தானியாவில் வாழும் 400 தென்னாசியர்கள் வரை எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இன்னும் பல நூறு பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் ஆகிய தென்னாசிய நாட்டு மக்களின் கலாச்சார மற்றும் பழக்க வழக்கங்கள் அவர்களை இந்நோய் பற்றி எதிர்மறையான சமூகப் பார்வை உடையவர்களாக வைத்து உள்ளது. அதனால் எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு இச்சமூகங்களிடையே மந்தமாகவே உள்ளது.

இந்நிலையால் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தலுக்கும் பாரபட்சத்துக்கும் உட்படுவதாக தென்னாசியர்களுக்கு பாலியல் சுகாதாரம் மற்றும் எய்ட்ஸ் தடுப்பில் சேவைகளை வழங்கும் நாஸ் திட்ட பணியாளர் தெரிவிக்கிறார். தென்னாசிய கலாச்சாரம் திருமணத்திற்கு முன்னர் பாலுறவை அங்கிகரிக்காது போனாலும் நிலைமைகள் அப்படியில்லை என்கிறார் கே எப் சி துரித உணவகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக வேலை செய்யும் தவநாதன். இங்கு வேலை செய்யும் பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் திருமணமாகாதவர்கள் என்று குறிப்பிட்ட அவர் ஸ்பெயின், இத்தாலி மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் பெண்களுடன் சில இளைஞர்கள் உறவுகளை வளர்த்துக் கொள்வதாகவும் அது சர்வசாதாரண விடயம் என்றும் உதயனுக்குத் தெரிவித்தார். ஆனால் யாரும் பாலியல் மற்றும் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகி இருந்தாலும் அது பற்றி பேச முன் வரமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது பெயர் குறிப்பிட விரும்பாத மற்றுமோர் தமிழ் இளைஞர் தான் பின்ஸ்பறி பார்க் பகுதியில் பணம் கொடுத்து பாலுறவில் சில சமயம் ஈடுபட்டதாகவும் அதே சமயம் எய்ட்ஸ் பரிசோதனை மேற்கொண்டு அது இல்லை என உறுதிப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார். எய்ட்ஸ் நோய் உடைய ஒருவரை அங்கிகரிக்கும் அளவிற்கு தமிழ் சமூகம் முன்வருமா என்ற கேள்வி இருக்கையில் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் தாங்கள் பாதிக்கப்பட்டு உள்ள விடயத்தை வெளியே சொல்லப் போவதில்லை. புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குள் மூழ்கி இருப்பதால் சமூக, சுகாதாரப் பிரச்சினைகள் இன்னமும் முன்னிலைக்கு வரவில்லை என்கிறார் சமூகவியலாளரும் மொழிபெயர்ப்பாளருமான சிவலிங்கம்.

இவற்றுடன் இலங்கை, இந்தியா போன்ற தென் ஆசிய நாடுகளுக்கு பயணிக்கும் இளைஞர்கள் அங்கு உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. உலகில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்படும் முக்கிய பகுதியாகி வரும் தென்னாசியாவில் திரமணத்திற்கு வெளியே இவர்கள் ஏற்படுத்தும் பாலியல் உறவுகள் மிவும் ஆபத்தில் முடியலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

# தென்னாசியாவில் எய்ட்ஸ் பிரளயம்

துணை சகாரன் ஆபிரிக்க நாடுகளை அடுத்து தென்னாசியாவே எய்ட்ஸ் பிரளயத்துக்கு உள்ளாகப் போவதாக எதிர்வு கூறப்பட்டு உள்ளது. துணை சகாரன் ஆபிரிக்க நாடுகளில் 30 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் நோய்க்கு உள்ளாகி உள்ளனர். உலகம் முழுவதும் உள்ள 42 மில்லியன் எய்ட்ஸ் நோயாளிகளில் 3 மில்லியன் பேர் கடந்த ஆண்டு மரணத்தை தழுவி இருக்கிறார்கள்.

இன்னும் சில ஆண்டுகளில் இந்தியாவே உலகில் அதி கூடிய எய்ட்ஸ் நோயாளிகளை உடைய நாடாக இருக்கப் போவதாக அமெரிக்க புலனாய்வுத்துறை அறிக்கை தெரிவிக்கிறது. தற்போது தென் ஆபிரிக்காவை அடுத்து அதிகூடிய எய்ட்ஸ் நோயாளிகளை உடைய இந்தியாவில் 4 மில்லியன் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதே நிலையில் இந்தியா சென்றால் 2010ல் எய்ட்ஸ் வைரசை காவுபவர்களின் எண்ணிக்கை 20 - 25 மில்லியனாகும் என அமெரிக்க புலனாய்வு அறிக்கை மதிப்பிட்டு உள்ளது. இதனை கோடிட்டுக் காட்டிய மைக்ரோ சொப்ற் பில் கேற் எய்ட்ஸிற்கு எதரான நடவடிக்கைகளுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி இருக்கிறார். அமெரிக்க புலனாய்வு அறிக்கையையும் பில் கேற்றின் உரையையும் தீவிர இந்து மதவாதிகளும் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இந்திய அரசியல் வாதிகளும் உடனடியாக மறுத்தனர்.

தென்னாசியர்கள் மத்தியில் காணப்படும் கலாச்சார சமூக முறைமைகள் மத்தியில் எய்ட்ஸ் நோய்க்கு எதிரான போராட்டத்தை எடுத்துச் செல்வதில் மிகுந்த கஸ்டத்தை சமூக சேவகர்கள் எதிர் நோக்குகின்றனர். மேலும் இந்நோய் பற்றிய தப்பபிப்பிராயங்களும் சமூக ஒதுக்கலும் இந்நோயை கட்டுப்படுத்த உதவாது என எய்ட்ஸ் நோய்க்கு எதிராக போராடி வருபவர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய அரசு எய்ட்ஸ்ற்கு எதிரான நடவடிக்கைகளில் மந்தமாக நடந்து கொண்டால் விளைவுகள் பாரதூரமாக அமையும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின் படி 2010ல் இந்தியாவில் 10 மில்லியன் பேர் இந்நோய்க்கு உள்ளாவார்கள் என மதிப்பிடப்பட்டது. ஆனால் அதிகாரிகள் தற்போது போன்று மந்தமான போக்கை கையாண்டால் அது இரட்டிப்பாகும் என அமெரிக்க புலனாய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

## மேலெழும் சிறுநீர் கழிப்பகம்

தலைநகர நகராட்சி மன்றம் மாலையில் நிலத்தில் இருந்து மேலெழும் 42 சிறுநீர் கழிப்பகங்களை அமைக்க உள்ளது. வீதிகளை நாற்றமடையச் செய்யும் ஆண்களின் நடத்தையை சகிக்க முடியாத வெஸ்ற்மினிஸ்டர் கவுன்சில் 15,000 பவுண் செலவில் தானாக சுத்திகரிக்கும் இந்த கழிப்பிடங்களை அமைக்க உள்ளது. இவற்றில் கை கழுவுவதற்கு ரப் இருக்காது என்பதுடன் அதற்கு கதவுகளும் இருக்காதாம். இதன் நோக்கம் வீதியில் சிப்பை கழட்டுவதை தடுப்பதாம்.

# ஹை ஸ்ரீற் நோத்தில் தமிழர் பொங்கல்

ஜனவரி 15ம் திகதி ஹை ஸ்ரீற் நோத்தில் மாலை 4 மணிக்கு நியூஹாம் மேயர் முன்னிலையில் தைப்பொங்கல் விழா கொஷ்டாடப்பட்டது. கடந்த ஆண்டு தெரு விளக்கேற்றலுடன் ஆரம்பித்த இவ்விழா மத, இன பேதமின்றி மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இவ்வாண்டும் அதே பொழிவுடன் தமிழர் தகவல் நடுவமும், தமிழ் வர்த்தக தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு நியுஹாம் கவுன்சிலுடன் இணைந்து இவ்விழாவை கொஷ்டாடினர்.. சிறு யாழ்ப்பாணம் என்றழைக்கப்படும் ஈஸ்ற்ஹாமில் இவ்விழா நடைபெறுவது பெருமைக்குரிய விடயம் என நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் தனது தனிப்பட்ட தென்கிழக்காசிய நாட்டுப் பயணத்திற்கு முன் உதயனுக்குத் தெரிவித்தார்.

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

Panesar Electrical Co.
EST 1981
மலிவு விற்பனை
12V LV Lamps 20W/35W/50W Buy 10 for £10.00 and get 2 free!
12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs Only £85.95
Mains Spotlight C/W 3x 50w Lamps Only £23.95! Chrome, Brass or White
Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit Only £22.95! While Stocks Last!
OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT
364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

# தமிழ் பேசும் முஸ்லீம்கள் தனி இனம்

நோர்வேயில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பற்றிய சந்திப்பும் கலந்துரையாடலும் புலம் பெயர்ந்த முஸ்லீம்களால் மனோபார்க்கில் நடத்தப்பட்டது. டிசம்பர் 7ம் திகதி இடம்பெற்ற இச்சந்திப்பிற்கு பேராசிரியர் ஜனாப் எம் வை எம் சித்திக் தலைமை தாங்கினார். நோர்வே பேச்சுவார்த்தையில் அரசாங்கப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட முஸ்லீம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவுப் ஹக்கீமிற்கு ஆலோசகராக கலந்து கொண்ட எம் ஐ எம் மொய்தீன் இக்கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டார். எப் எஸ் எம் பாருக், சட்டவல்லுணர் எஸ் எம் எம் பசீர், ஜலால் தீன் ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட முஸ்லீம்களை பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்திய இச்சந்திப்பில் முஸ்லீம் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட பிளவு கலந்துரையாடலில் வெளிப்பட்டது. பேச்சாளர்கள் விடுதலைப் புலிகள் தமிழ் பேசும் முஸ்லீம்களை தனி இனமாக அங்கீகரிக்கத் தயங்குவதைச் சுட்டிக்காட்டினர். கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் தமிழ், முஸ்லீம் இனங்களிடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தி இருப்பதாகக் குறிப்பிட்ட பசீர் அண்மைக் காலச் சம்பவங்களும் நம்பிக்கை தருவதாக இல்லை எனக் குறிப்பிட்டார். இந்த சமாதானப் பேச்சு வார்த்தை வெற்றியளிக்க முஸ்லீம்களுக்கு அவர்களது உரிமைகள் வழங்கப்படுவது அவசியம் என சித்திக் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

முஸ்லீம்களது உரிமைகளை முஸ்லீம் கட்சிகளிடம் கொடுக்க முடியாது எனக் குறிப்பிட்ட எம் ஐ எம் மொய்தின் சுயாதீன அமைப்பு ஒன்றின் மூலமே மூஸ்லீம்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். எம் ஐ எம் மொய்தீனின் முஸ்லீம் தகவல் நடுவம் பற்றிய கருத்தை தமிழர் தகவல் நடுவத் தலைவர் வரதகுமாரும் அங்கு பணிபுரிபவரான விசாகனும் வரவேற்று கருத்து வெளியிட்டனர்.

# இலங்கை முஸ்லீம் பிரதிநிதி இலண்டனில் சந்திப்பு

இலங்கையில் இருந்து பிரித்தானியா வந்திருந்த டொக்டர் ஹஸ்புல்லாவை பிரித்தானிய வட - கிழக்கு முஸ்லீம்கள் அமைப்பினர் சந்தித்தனர். டிசம்பர் நடுப்பகுதியில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பேராசிரியர் சித்திக், சட்டவல்லுனர் பசீர், பேராசிரியர் ஜலால்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பு வெம்பிளியில் உள்ள இலங்கை முஸ்லீம் கலாச்சார மையத்தில் இடம்பெற்றது.

வடக்கில் இருந்து புலம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வில் தன்னை நீண்டகாலமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள ஹஸ்புல்லா அண்மையில் கனடாவில் இடம்பெற்ற இலங்கையில் சமாதானமும் ஜனநாயகமும் என்ற மாநாட்டில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அம்மாநாட்டில் புனர்வாழ்வுத் திட்டங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களின் நலன்கள் கவனிக்கப்பட வேண்டும் என்பது மிகவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

முஸ்லீம் பிரச்சினையில் சம்பந்தப்பட்டு உள்ள இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் அமைப்பினர் என பல்வேறு தரப்பினருக்கும் சமர்ப்பிக்கும் சில பிரேரணைகள் முன்வைக்கப்பட்டது. மற்றுமொரு சந்திப்பில் இப்பிரேரணைகள் மேலும் சீர்படுத்தப்பட்டு அரசுக்கும் புலிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஏனையவர்களுக்கும் இது அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

# சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மாநாடு

இலங்கையில் சமாதானமும் ஜனநாயகமும் என்ற மாநாடு கனடாவின் தலைநகர் ரொறன்ரோவில் இடம்பெற்றது. நவம்பர் 23, 24ம் திகதிகளில் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இம்மாநாட்டை சர்வதேச மன்னிப்புச் சபையின் கனடிய கிளையும் கனடிய தொழிற்சங்கத்தினரும் ஒழுங்கு செய்திருந்தனர். இச்சந்திப்பில் இலங்கையில் இருந்து டொக்டர் ஹஸ்புல்லா, பிரித்தானியாவில் இருந்து மனித உரிமைவாதி வி சிவலிங்கம், சட்ட வல்லுனர் பசீர், பிரான்ஸில் இருந்து உயிர் நிழல் சஞ்சிகைக் குழுவினர் கலைச்செல்வன், இலக்ஷ்மி, அமெரிக்காவில் இருந்து வாசுகி நேசையா, பத்திரிகையாளர் நிருபம்மா சுப்பிரமணியம், கனடாவைச் சேர்ந்த ரெக்ஸ், ரகுநாதன், ராஜேந்திரன், டேவிட்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களுடன் வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் அபிவிருத்தி குறிப்பாக வடக்கு கிழக்கின் அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் பற்றி இம்மாநாட்டில் பேசப்பட்டது.

# தமிழ் இளைஞர்களின் மற்றுமொரு முயற்சி

விம்பிள்டன் நகரில் புதிய தமிழர் வியாபார முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதுவரை தமிழ்க் கடை, நகைக்கடை, சாப்பாட்டுக் கடை என்று இருந்த நிலையை மாற்றி தபால் மூலம் பொருட்களை விற்பனை செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இரு தமிழ் இளைஞர்கள் கூட்டாக "த பிறிலன் கொம்பனி" என்ற நிறுவனத்தை உருவாக்கி இருக்கிறார்கள். மேட்டன் கவுன்சில், Institute of School of Marketing and managment, ஆகியவை இவ்விளைஞர்களுக்கு விற்பனை முறை, முகாமைத்துவம், வடிவமைப்புகள் ஆகியவற்றில் ஆலாசனைகளும் வழங்கி உள்ளன.

படுக்கை, மேசை விரிப்புகள் குளியலுக்கான துவாய்கள் மற்றும் குழந்தைகளுக்கான விரிப்புகள் ஆகியன நேரடியாக ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டு தபால் மூலம் பாவனையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக இதன் உரிமையாளர்களில் ஒருவரான பயஸ் 'அந்தோனிப்பிள்ளை உதயனுக்குத் தெரிவிக்கிறார். மேலும் பல தயாரிப்புகளை புதிய உற்பத்தியாளர்களிடம் இருந்து எதர்காலத்தில் பெற்றுக் கொள்ள இருப்பதாகக் குறிப்பிட்ட பயஸ் அநேகமானவை இலண்டனில் எம்மிடம் மட்டுமே கிடைக்குமெனவும் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் காலப் போக்கில் இதன் கிளைகள் வெவ்வேறு பகுதிகளில் திறக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் மத்தியில் இணையத்தளம் மூலமாக பொருட்களை கொள்வனவு செய்யக் கூடிய ஒரே அமைப்பாகவும் இந்நிறுவனம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சண்ணின் - தீர்வு - ஒரு பரிசோதனை

குறும்பட இயக்குநர் ரூற்றிங் சண்ணின் - தீர்வு - திரைப்படம் டிசம்பர் 15ம் திகதி ரூற்றிங்கில் திரையிடப்பட்டது. மண்டபம் நிறைந்த ரசிகர்கள் மத்தியில் திரையிடப்பட்ட இப்படம் சண்ணின் ஒரு பரிசோதனைப்படம் என்கிறார் இலண்டனில் தயாரிக்கப்பட்ட இரகசிய சிநேகம் பட இயக்குனர் கீர்த்திசிங்கம். ஈழத்து இயக்குனர் இந்தியக் கலைஞர்களைக் கொண்டு ஈழத்துக் கதையை இயக்கி இருப்பது ஒரு வித்தியாசமான முயற்சி என்கிறார் அவர்.

சண்ணின் இயக்கத்தில் உருவான இத் தீர்வு திரைப்படத்துக்கு இசையமைத்து உள்ள இனியவன் திறம்பட இசைவழங்கி இருப்பதாக பார்வையாளர்கள் பாராட்டுத் தெரிவித்தனர். படத்தில் தொழில்நுட்பம் மிகவும் நுட்பமாக அமைந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. படத்தில் தமிழக, யாழ் மொழிக் கலப்புகள் படத்திற்கு ஏற்பாக அமையவில்லை என்பதும் வெளிப்பட்டது. ஆயினும் இவை எல்லாவற்றிற்கும் அப்பால் புலம்பெயர் சினிமா கலைஞர் சண்ணின் முயற்சிக்கு பலத்த பாராட்டுக்கள் கிடைக்கப்பெற்றது.

சென்னை தொழில்நுட்பக் கூடங்கள் ஆசியாவிலேயே மிகச் சிறந்தவை எனக் குறிப்பிட்ட இயக்குநர் அஜீவன் புலம் பெயர்ந்த கலைஞர்கள் தரமான படைப்புகளை உருவாக்கும் வகையில் தமது திறமைகளையும் தொழில்நுட்ப அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கதாநாயகன் திலீன் நேரடி யுத்தத்தில் காயப்பட்ட தனது இளவயது நண்பனான இராணுவச் சிப்பாயைச் சந்திக்கிறான். இந்த நண்பர்கள் அழிவை ஏற்படுத்தும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முயல்கின்றனர். இதுவே கதை. பாடல் காட்சிகளையும் கொண்டு 85 நிமிடங்கள் கதை நகர்த்தப்படுகிறது.

# 2003 ஐரோப்பியத் தமிழ்த் திரைப்பட விழா

ஐரோப்பியத் திரைப்படக் கழகம் நடத்தும் ஐரோப்பியத் தமிழ்த் திரைப்பட விழா பெப்ரவரி மாதம் சுவிஸில் நடைபெற இருக்கிறது. எண்ணற்ற கனவுகளோடு யதார்த்த சினிமாவுலகில் பரந்து கிடக்கும் படைப்புகளையும் படைப்பாளிகளையும் ஒன்று சேர்த்து சர்வதேச சமூகத்தின் முன் வெளிக்கொணர்வதற்கான ஒரு சிறுதுளி முயற்சி இதுவென சென்னையில் இருந்து வெளிவரும் திரைவிமர்சன இதழான நிழல் சஞ்சிகை குறிப்பிட்டு இருக்கிறது.

இத்திரைப்பட விழாவில் பங்கு பற்றும் குறும் திரைப்படங்களுக்கு முறையே தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் அதற்கு அடுத்த படியான 10 குறும் படங்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்பட இருக்கிறது. கலந்து கொள்ளும் அனைத்துத் திரைப்படங்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கிறது. மேலும் சிறந்த கதை, திரைக்கதை, இயக்குநர், ஒளிப்பதிவாளர், தொகுப்பாளர், இசையமைப்பாளர், கலை இயக்குநர் என தொழில்நுட்ப விருதுகளும் வழங்கப்பட இருக்கிறது.

இவ்விழாவில் தெரிவு செய்யப்படும் படங்கள் சுவிஸ் திரைப்பட சம்மேளனம் வழியாக சர்வதேச திரைப்பட விழாவுக்கும் அனுப்பி வைக்கப்படும் என இவ்விழா ஒழுங்கமைப்பாளர் அஜீவன் உதயனுக்குத் தெரிவிக்கிறார். ஐரோப்பியத் திரைப்படக் கழகம் இவ்விழாவை இலண்டனில் மேற்கொள்ள முயற்சிப்பதாகவும் அஜீவன் குறிப்பிட்டார்.

# பிரித்தானியாவுக்கு புலம்பெயரும் இலங்கையரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

இலங்கையில் ஏற்பட்டு உள்ள சமாதான நடவடிக்கைகளை அடுத்து பிரித்தானியாவுக்கு புலம் பெயரும் தமிழர்களின் எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. 2000 ம் ஆண்டு 6,395 தஞ்ச விண்ணப்பங்களும் 2001ம் ஆண்டு 5,545 தஞ்ச விண்ணப்பங்களும் இலங்கையர்களிடம் இருந்து பெறப்பட்டதாக உள்துறை அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாண்டு தஞ்சம் கேட்டு வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3,500 வரையே இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இவ்வாண்டின் முதல் 9 மாத காலப்பகுதியில் 2,755 விண்ணப்பங்களே இலங்கையர்களிடம் இருந்து வந்துள்ளது.

1996 காலப்பகுதியில் பிரித்தானியாவில் தஞ்சம் கேட்ட தமிழர்களின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தஞ்சம் கேட்கும் தமிழர்களின் எண்ணிக்கை மீண்டும் 1998ம் ஆண்டு கால நிலைக்குச் செல்கிறது. இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை வளர வளர புலம்பெயர்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என்கிறார் பிரித்தானிய அகதிகள் அமைப்பு அலுவலர் ஒருவர். அவர் மேலும் குறிப்பிடுகையில் அகதிகளின் புலம் பெயர்வு தளத்தில் உள்ள நிலைமைகளிலேயே தங்கி உள்ளது எனக் குறிப்பிட்ட அவர் கடந்த காலப் பேச்சு வார்த்தைகளை நாம் அவ்வளவு இலகுவில் மறந்துவிட முடியாது எனக் குறிப்பிட்டார். ஏற்கனவே மேற்கு நாடுகளை நோக்கிப் புறப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் உலகின் பலவேறு நாடுகளிலும் மேற்கிற்கு வரக் காத்திருக்கின்றனர். பல இலட்சங்களையும் சிரமங்களையும் செலுத்திப் புறப்பட்டவர்கள் அவ்வளவு இலகுவில் தாயகம் திரும்பமாட்டார்கள் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. தற்போது வந்து கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்க முன்னரே புறப்பட்டு வெவ்வேறு நாடுகளில் சிக்குண்டவர்களாக இருக்கலாம் என அகதிகள் அமைப்புகளுடன் தொடர்புடையவர்கள் கருதுகின்றனர்.

# இரு தமிழ் சட்ட அமைப்புகள் மோத உள்ளன

தொழில் நீதி மன்றுக்கு பெப்ரவரியில் வர உள்ள வழக்கில் இரண்டு தமிழ் சட்ட நிறுவனங்கள் மோத உள்ளதாக தெரியவருகிறது. TR-TEC மற்றும் LCT நிறுவனத்தின் முன்னாள் அலுவலர் திருமாறன் நியாயமற்ற முறையில் தன்னை வேலையால் நிறுத்திவிட்டார்கள் என்று குற்றம்சாட்டி அந்நிறுவனத்திற்கு எதிராகத் தொடுத்த வழக்கிலேயே இரு தமிழ் சட்ட நிறுவனங்கள் மோத இருக்கின்றன. இதே போன்ற வழக்கு தமிழர் வீட்டு வசதிக் கழகத்திற்கு எதிராக வந்திருந்த போதும் அதில் தமிழ் சட்ட நிறுவனங்கள் மோதிக் கொள்ளவில்லை.

ஆனால் திருமாறனுடைய வழக்கில் அவரை ரென்கன் என் தேவராஜன் சட்டநிறுவனம் பிரதிநிதித்துவம் செய்கிறது. TR-TEC மற்றும் LCT நிறுவனத்தை நாக் அன் கோ சட்டநிறுவனம் பிரதிநிதித்துவம் செய்து வருகிறது. பிரித்தானிய நீதிமன்றில் இரண்டு தமிழ் சட்ட நிறுவனங்கள் ஒரு பிரபல்யமான வழக்கில் மோத இருப்பது இதுவே முதற் தடவையாகும். மோதுவது இரண்டு தமிழ் நிறுவனங்கள் என்பதால் இவ்வழக்கு மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்பட இருக்கிறது. சம்பந்தப்பட்ட இரண்டு நிறுவனங்களும் தங்கள் மற்றைய வழக்குகளில் காட்டும் கவனத்தை விட இதில் ஒரு படி அதிகம் கவனம் எடுப்பார்கள் என இவ்வழக்கை எதிர்பார்த்திருக்கும் செய்தியாளர் சுதர்சன் தெரிவிக்கிறார்.

# புகைத்தலை நிறுத்த உதவி

வோல்தம் பொறஸ்ற் ஓர்போர்ட் வீதியில் இயங்கும் ஆசியர்கள் மையம், ஆசியர்களுக்கான புதிய சுகாதாரத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் புகைப்பிடிப்பதை நிறுத்துவதற்கு உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட இருக்கிறது. இதற்கான வாராந்த வகுப்புகள் மார்ச் மாதம் வரை நடைபெற இருக்கிறது. விப்ஸ்குறொஸ் மருத்துவமனை இதய நிபுணர் சாந்தி குப்தா இம்மருத்துவ ஆலோசனை வகுப்பை நடத்துகிறார். புகைத்தலை நிறுத்த விரும்பும் யாரும் இவ்வகுப்புகளுக்கு வரலாம் என இத்திட்டத்தை நிர்வகிக்கும் சாரா அப்பாஸ் தெரிவிக்கிறார். புற்றுநோய், இதய நோய்கள் மற்றும் பல நோய்களுக்கு காரணமான புகைத்தலை நிறுத்தி உடல் சுகாதாரத்தை வளம்படுத்துவதே இதன் நோக்கம் என சாரா அப்பாஸ் மேலும் தெரிவித்தார். (தொடர்புகளுக்கு - சாரா அப்பாஸ் - 020 8503 6254)

## வாசகர் கடிதம்

# TR -TEC ஆல் நிறுத்தப்பட்ட பெண்மணியின் மடல் "நியாயமற்ற முறையில் விலத்தப்பட்டேன் உதயன் வாசகர்களிடம் நியாயம் கேட்கிறேன்"

(TR -TEC அண்மைக் காலமாக பலத்த முகாமைத்துவச் சீர்கேட்டுக்கும் நிதி நிர்வாகச் சீர்கேட்டிற்கும் உட்பட்டிருப்பதை கடந்த கால இதழ்களில் உதயன் பத்திரிகை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக அந்நிறுவனத்தில் இருந்து நிறுத்தப்பட்ட இப்பெண் எமக்கு எழுதிய மடலை இங்கு பிரசுரிக்கிறோம். அவர் தனது பெயர் பிரசுரமாவதை விரும்பாத படியால் அவரது பெயர் பிரசுரிக்கப்படவில்லை. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் சட்டப்படி அணுகினால் அவர் தன்னை இனம் காட்டத் தயங்கமாட்டார் என்பதை உதயன் உறுதிப்படுத்துகிறது.)

நான் TR -TEC இல் வேலை பார்த்து அவர்களால் விலத்தப்பட்டேன். நிதி இல்லை என்று சொல்லித் தான் நான் விலத்தப்பட்டேன். ஆனால் எனக்கு முதல் வருடக் கணக்காக இருப்பவர்களும் எனக்குப் பிறகு சேர்ந்தவர்களும் அங்கு இருக்கிறார்கள். அங்கு வேலை செய்வதானால் முகாமையாளர் சிறிதரனுக்கு இசைவாக நடந்து கொண்டால் தான் வேலையில் நீடிக்க முடியும்.

இங்கு இரண்டரை வருடமாக ஒரு தமிழ்ப் பிள்ளையை வேலை தருவதாகச் சொல்லி வொலண்ரியராக வைத்திருந்து விட்டு நிறுத்தி விட்டார்கள். அங்கு பொதுவாக நண்பர்களையும் உறவினர்களையும் தான் வேலைக்கு எடுப்பார்கள். அப்படி எடுக்கப்படுபவர்களுக்கு வேலை அனுபவம் எதுவும் இருப்பதில்லை.

எனக்கு முதல் திருமாறன் என்பவரை வேலையால் நிறுத்தினார்கள். அவர் இல்லாவிட்டால் London College of Technology இல்லை. இது அறக்கட்டளையினருக்கும் தெரியும்.

Individual Learning Account - ILA அறிமுகப்படுத்தப்பட்ட சமயம் மாணவர்கள் படிக்க வராமலே தாங்கள் கையெழுத்துப் போட்டு காசு எடுத்தார்கள். இலண்டனுக்கு அகதியாக வரும் எம்மவர்களின் மேம்பாட்டுக்கான கணணிக் கல்வி நிறுவனம் ஒரு சமூதாயப் பாடசாலை. ஆனால் அங்கு கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் மேம்பாடு கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

தங்களின் வருமானத்திற்காக மாணவர்களைச் சேர்த்து அவர்களின் பெயரால் அதிக அளவு பணத்தை நிதி நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்கிறார்கள். அந் நிதி மாணவர்களின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படுவதில்லை. இவற்றுக்கெல்லாம் தலைவர் ரகுராஜ்ம் உடந்தை. இவர்கள் கூறுவது போல இங்கு கற்று வெளியேறும் மாணவர்களால் வேலை எடுக்க முடிவதில்லை. காரணம் இவர்கள் மாணவர்களுக்கு முறையான ஸ்தாபனங்களில் பயிற்சி எடுத்துக் கொடுக்காமையே.

இந்நாட்டு நிறுவனங்களில் ஊழியருக்கு உள்ள சலுகைகள் எதுவும் நண்பர்கள் உறவினர்களைத் தவிர மற்றையவர்களுக்கு கிடைப்பதில்லை. வேலையில் சேரும் போது தரப்படும் ஒப்பந்தப் பத்திரம் தரப்படுவதில்லை. வேலையால் நிறுத்தும் போதும் கேட்டால் தான் அதற்கான பத்திரங்களைத் தருகிறார்கள். விடுமுறை, மருத்துவ விடுமுறை என்பன தரப்படுவதில்லை. அதிருப்தி உள்ளவர்களும் ஊழியர்களும் வேலையைக் காப்பாற்றும் பொருட்டு மௌனியாக இருக்கிறார்கள். அல்லது சிறிதரனுக்கு கால் பிடித்து விடுபவர்களாக இருக்கிறார்கள்.

என்னைப் போல் நியாயம் கேட்பவர்களுக்கு உதயன் செய்யும் சேவையை பாராட்டுகிறேன். உதயனின் வாசகர்கள் மூலம் நான் நியாயம் கேட்கிறேன்.

# புலித்தோல் போர்த்தும் ஊழல் பேர்வழிகள்

தாங்கள் செய்யும் ஊழல்களை மறைத்து மக்களை ஏமாற்றும் புதிய தந்திரம் ஒன்று கடந்த ஆண்டு முடிவில் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. தமிழீழ விடுலைப் போராட்டத்தையும் அதன் தலைவரையும் தங்கள் ஊழல் விவகாரங்களை மறைக்கும் கேடயமாக இந்த ஊழல் பேர்வழிகள் பயன்படுத்துகின்றனர். இந்த வகையிலேயே தலைவரின் படத்தை முன் பக்கத்தில் போட்டு, விடுதலை என்ற பெயரில் தங்கள் ஊழலை மறைக்கும் பெரும் துண்டுப் பிரசுரங்கள் ஜெயதேவன் குழுவால் வெளியிடப்பட்டு உள்ளது. பத்திரிகையிலும் சஞ்சிகையிலும் இருந்து விரட்டியடிக்கப்பட்ட ஜெயதேவன் குழு தற்போது விடுதலை என்ற பெயரில் பெரிய அளவில் துண்டுப் பிரசுரம் விட்டு வருகிறது.

பன்றியும் நாற்றமும் போல ஜெயதேவனும் ஊழலும் விட்டுப் பிரியாதவை. ஜெயதேவன் இருக்கும் இடமெல்லாம் ஊழல் இருக்கும். ஊழல் இருக்கும் இடமெல்லாம் ஜெயதேவன் இருப்பார். அண்மைக்காலம் வரை ஜெயதேவன் புலித்தோல் போர்த்தி தனது ஊழல் சாம்பிராஜ்யத்தை நடத்தி வந்தார். பின்னர் கிங்ஸ்பரி தொழிற்கட்சியின் போர்வையில் தேர்தலுக்கு நிற்க முயற்சித்தார். ஆனால் தற்போது விடுதலைப் புலிகளும், தொழிற்கட்சியும் இவரை அடையாளம் கண்டு கொண்டுள்ளன. மேலும் தொழிற்கட்சி பா உ பரி காடினரும், ஐரோப்பிய பா உ றொபேர்ட் இவான்சும் ஜெயதேவனின் சுயரூபத்தை அறிந்து வருகின்றனர். ஈழபதீஸ்வரர் ஆலயத்திலும் கிங்ஸ்பரி தமிழ் பள்ளிக் கூடத்திலும், தமிழர் வீட்டு வசதிக் கழகத்திலும் ஜெயதேவன் குழு அசிங்கமான முறையில் சண்டைகளில் ஈடுபட்டமையும் அவரின் ஊழல்களும் அந்த அரசியல் வாதிகளை ஜெயதேவனிடம் இருந்து விலத்தி வருகிறது.

அனைத்து ஸ்தாபனங்களில் இருந்தும் ஒதுக்கப்பட்டு வரும் ஜெயதேவன் தற்போது இயலாத கட்டத்தில் தன்னைப் பற்றி தானே புகழ்ந்து விடுதலை என்ற பெயரில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டு வருகிறார். மேலும் ஈழபதீஸ்வரர் ஆலயத்தை ஜெயதீஸ்வரன் ஆலயமாக மாற்றித் தன் ஊழல் சாம்ராஜ்யத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

அண்மைக் காலங்களில் ஈழபதீஸ்வரர் ஆலய ஊழல், கிங்ஸ்பரி பாடசாலை ஊழல், வீட்டுவசதிக் கழக ஊழல் மற்றும் அடிதடி விடயங்கள் பற்றி பரவலாக பொது மக்களால் பேசப்படுகிறது. இவையெல்லாம் ஜெயதேவனின் நீண்ட ஊழல் பயணத்தின் புதிய தரிப்புகள். ஜெயதேவனின் ஊழல் நடவடிக்கைகள் இன்று நேற்று ஆரம்பமானது அல்ல. இது இற்றைக்கு 12 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வருகிறது. 12 ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயதேவன் டொக்டர் நித்தியானந்தனுடன் இணைந்து வெஸ்ட் இலண்டன் தமிழ் பள்ளியை ஆரம்பித்தார். அங்கு ஜெயதேவனின் அட்டகாசம் தாங்கமாட்டாமல் அவர் தூக்கி எறியப்பட்டார். அதன் பின்னர் ஜெயதேவன் கிங்ஸ்பரி பாடசாலையை ஆரம்பித்தார். அதுவும் தற்போது ஊழல் அடிதடி காரணமாக இழுத்து மூடப்பட்டது. பின்னர் ஜெயதேவன் மீண்டும் சுத்துமாத்து செய்து அன்மையில் அப் பாடசாலையை திறந்திருக்கின்றார்.

அகதிகள் நடவடிக்கைக் குழுவின் தலைமைப் பொறுப்பில் அன்று இருந்தவரை நீக்கி விட்டு பின் கதவால் வந்த ஜெயதேவன் அதனைப் பொறுப்பேற்றார். தமிழர் வீட்டு வசதிக் கழகத்திலும் ஜெயதேவன் பின் கதவு வழியாக வந்து பதவியை பிடித்துக் கொண்டமை நீதி மன்றத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது.

சுருக்கமாக பார்க்கும் இடத்து ஈழபதீஸ்வரர் ஆலய ஊழல், கிங்ஸ்பரி பாடசாலை ஊழல் போன்றவை ஆச்சரியப்படுவதற்கிலை. ஏனெனில் ஜெயதேவன் இருக்கும் இடமெல்லாம் ஊழல் இருக்கும். ஊழல் இருக்கும் இடமெல்லாம் ஜெயதேவன் இருப்பார். ஊழலும் ஜெயதேவனும் இரட்டைக் குழந்தைகள்.

ஜோஸப் (முன்னால் ஈழபூமி நிருபர்)
கிங்ஸ்பரி
இலண்டன்

# ஆட்கொல்லிக் காய்ச்சல் அபாயம்

ஸ்பெயின் பெலராக்கி உல்லாசப் பயணத் தீவில் வைரஸ் ஆட்கொல்லிக் காய்ச்சல் கண்டு பிடிக்கப்பட்டது. இன்புழுவன்சா பி எனும் வைரஸ் கிருமியின் வகையில் இருந்து திரிபடைந்த கிருமியே இந்தக் காய்ச்சலுக்கு காரணம் என நம்பப்படுகிறது. நோய்வாய்ப்பட்டவர்களும் வயோதிபர்களும் உடனடியாக (புளூ ஜாப்) தடுப்பு ஊசியை போட்டுக் கொள்ளும்படி பிரித்தானிய அதிகாரிகள் ஆலோசனை தெரிவிக்கின்றனர். ஸ்பெயினில் இந்நோயை கண்டிறிந்து மருத்துவர் ஜோர்டி றீனா இது வழமைக்கு மாறானது என்றும் 11 - 13 வயதுக் குழந்தைகளை மிகவும் பாதித்து உள்ளதாகவும் குறிப்பிட்டார். தற்போது உள்ள தடுப்பூசி இப்புதிய இனத்தையும் கட்டுப்படுத்தும் என பிரித்தானிய பொதுச் சுகாதார ஆய்வகம் தெரிவித்து உள்ளது.

மனிதர்களில் ஏற்படும் காய்ச்சலுக்கான கிருமி பறவைகளிலும் மற்றைய விலங்குகளிலும் காணப்படும் கிருமிகளுடன் சேர்ந்து நோயை ஏற்படுத்துகிறது. ஆனால் மனித நீர்ப்பீடனத் தொகுதி மனிதர்களையும் மற்றைய விலங்குகளையும் பாதிக்கும் கிருமியை வேறுபடுத்தி அறிவதில்லை. அதனால் சிலசமயம் பாரதூரமான ஆட்கொல்லி பரவிவிடுகிறது.

# லைட் (light) சிகரட்டிற்கு ஐரோப்பா தடை விதிக்கிறது

சிகரட் பக்கட்டுக்களில் லைட் என பயன்படுத்தும் பதம் பாவனையாளர்களிடம் தறவான எண்ணத்தை ஏற்படுத்துவதாகக் கூறி அதனை நீக்குமாறு லக்சம்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது. பிரபலமான மல்போறா லைட் ஐரோப்பாவில் தனது விற்பனைப் பெயரை மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளது. மேலும் இந்த தீர்ப்பு சிகரெட்டில் உள்ள நிக்கொட்டினின் அளவை 1 மில்லி கிராமாகவும் ராறின் அளவை 12ல் இருந்து 10 மில்லி கிராமாகவும் குறைக்கும் படி கட்டுப்படுத்தி உள்ளது.

மேலும் ஜனவரி முதல் சிகரெட் பக்கற்களில் சுகாதார எச்சரிக்கைகள் முக்கிய இடம் பெற இருக்கின்றன. அதன்படி பக்கற்றின் முற்பக்கத்தில் 30 வீதமும் பிற்பக்கத்தில் 40 வீதமும் சுகாதார எச்சரிக்கைகள் இடம்பெற உள்ளன. புகைப்பது தற்கொலை மற்றும் பாதிக்கப்பட்ட சுவாசப்பைகள், பற்களின் படங்கள் என்பன பக்கற்றில் முக்கிய இடம்பெற இருக்கிறது. தற்போது சுகாதார எச்சரிக்கைக்கு ஆறுவீத இடமே ஒதுக்கப்படுகிறது.






நான் அப்பவே சொன்னேன் கேட்டீரா வேண்டாம் எண்டு. மொட்டை கடுதாசியோடு நிறுத்திக்கொள்ளாம இளிச்ச வாயன் இந்திரகுமாரின் பேச்சினால இப்ப உம்ம கதி அதோகதியாக்கிக் கொள்ள வழி தேடிகிட்டீரே. கவனம். கவனம் தேவா கவனம். இல்லாட்டி நாவற்குழியில் ஆரம்பித்து இப்ப இருக்கற உம்ம வீடுதேடிவரும் ஆப்பு...

ADVT.


# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

NEWS

# குறைமாதக் குழந்தைப் பேற்றை தடுக்க முயற்சி

குறைமாதத்தில் குழந்தை பிறப்பதற்கான காரணத்தை அறிந்து உள்ள மருத்துவர்கள் அதனை தடுக்க முடியும் என நம்புகின்றனர். தாய்மை அடையும் போது கரு விருத்தி அடைவதற்கு வசதியாக வருவறைத் தசைகள் தளர்வாக வைக்கப்பட்டு இருக்கும். இதற்கு ஜி அல்பா எஸ் எனும் புரதம் காரணமாக இருக்கிறது. குழந்தைப் பேற்றின் போது இப்புரதம் குறைந்து குழந்தைப் பேறு நிகழ்கிறது. குழந்தை விருத்தி அடைய முன்பே இப்புரத அளவு வீழ்ச்சி அடைவதால் குறைமாதக் குழந்தைப் பேறு நிகழ்வதாக ஆய்வை மேற்கொண்ட நியூகாஸ்டில் பல்கலைக் கழகக் குழு தெரிவிக்கிறது. ஜி அல்பா எஸ் புரத அளவை தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் வைத்துக் கொள்ள முடிந்தால் இந்தக் குறைமாதப் பிறப்பைத் தவிர்க்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். என்ன காரணத்தால் குழந்தை விருத்தி அடைய முன்னரே இப்புரத அளவு குறைகிறது என்பதைக் கண்டு பிடித்து அதனைத் தடுப்பதே இறுதியான தீர்வாக இருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

பிரித்தானியாவில் 7 - 10 வீதமான குழந்தைகள் குறைமாதத்தில் பிறக்கின்றன. ஆண்டுக்கு 50,000 குழந்தைகள் இவ்வாறு பிறக்கின்றனர். இக்குறைமாதக் குழந்தைகளில் நீண்ட கால மூளை மற்றும் உடல் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இளம் வயதில் மரணமடையும் குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கினர் குறைமாதத்தில் பிறந்தவர்கள் என்பதும் ஆய்வில் தெரிய வந்து உள்ளது.

# இலண்டனில் மூன்றில் ஒருவர் கருக்கலைப்பு செய்கின்றனர்

இலண்டனில் தாய்மை அடையும் பெண்களில் மூன்றில் ஒருவர் கருக் கலைப்புச் செய்வதாக புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிக்கிறது. மேலும் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் ஒரு தடவை கருக்கலைப்புச் செய்தவராக இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. பெண்கள் தமது குடும்ப வாழ்விலும் பார்க்க தமது தொழில் காரணங்களின் நிமித்தம் இதனைச் செய்வதாக குடும்ப கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவிக்கிறது. கருக்கலைப்பு என்பது பற்றிய சமூகப்பார்வை மாற்றமடைந்து வருவதாகக் குறிப்பிட்டு உள்ள அவ்வமைப்பு இது பரவி வரும் சமூக நடத்தையாகி வருவதாகக் குறிப்பிட்டு இருக்கிறது.

தமிழ் பெண்கள் மத்தியில் இக்கருக்கலைப்பு மேற்குறிப்பிட்ட வீதத்தில் இல்லாவிட்டாலும் குறைந்த அளவில் இடம்பெறுவதாக நம்பப்படுகிறது. அதற்கு பொருளாதார மற்றும் சமூக காரணங்கள் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இன்றும் தமிழ் மக்கள் மத்தியில் கருக்கலைப்பு சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு அம்சமாகவே உள்ளது. அவுஸ்திரேலியாவில் - 76,000 , ஜேர்மனியில் - 135,000 , அமெரிக்காவில் 1,310,000 (1.31 மில்லியன்) கருக்கலைப்புகளும் இடம்பெறுகிறது.

# சாலை விபத்தில் இருவர் படுமரணம்

# 5 குழந்தைகள் தம் தந்தையரை இழந்தனர்

நவம்பர் மாதக் கடைசிப் பகுதியில் இடம்பெற்ற பாரிய விபத்தில் இரு தமிழ்க் குடும்பங்களின் வாழ்க்கை சின்னா பின்னமானது. சென் ஜோர்ஜ் மருத்துவ மனையில் சிகிச்சையை முடித்துக் கொண்டு பிறிஸ்டலில் உள்ள தங்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த கிலன் மோர் புறப்பட்டீஸ் பங்காளியும் நிர்வாக இயக்குநருமான திருநாவுக்கரசு மணிவண்ணன்(37) - நல்லூர், சிவசுப்பிரமணியம் சுதர்சன்(43) - சுண்டுக்குளி ஆகியோரே பாரிய விபத்தில் உயிரிழந்தனர். இவர்களது இறுதிக் கிரியைகள் முறையே டிசம்பர் 15ம் திகதியும் 24ம் திகதியும் நடைபெற்றது. இவ்விபத்தில் மிகுந்த எரிகாயங்களுக்கு உட்பட்ட திருமதி சுதர்சன் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பிறிஸ்டலுக்கு தனது பென்ஸ் ஜீப்பை ஓட்டிச் சென்று கொண்டிருந்த மணிவண்ணன் அவர்களது வீட்டில் இருந்து 15 நிமிடங்களே இருந்த பெரு வீதியின் 16வது சந்திக்கு அருகில் உள்ள தடை ஒன்றில் மோதியதை அடுத்து இந்த விபத்து நடந்துள்ளது. தடையில் மோதிய பென்ஸ் ஜீப் தடம்புரண்டு பள்ளத்தில் வீழ்ந்து ஐந்தாறு தடவைகள் தடம்புரண்டு மின்மாற்றியுடன் மோதித் தீப்பிடித்துக் கொண்டதாக இந்த வண்டிக்குப் பின்னால் வந்தவர்கள் காவல்துறையினருக்குத் தெரிவித்து உள்ளனர். பென்ஸ் ஜீப்பை தொடர்ந்து வந்தவர்கள் தீயணைப்பு மற்றும் காவல்துறை அனுபவம் மிக்கவர்கள் என்று கூறிய இறந்தவர்களின் நெருங்கிய உறவினர் யோகராஜா, அவர்களது முயற்சியால் தான் திருமதி சுதர்சனைக் காப்பாற்ற முடிந்ததாகத் தெரிவித்தார்.

வண்டி தடம்புரண்டபோது தூக்கி வீசப்பட்ட சுதர்சன் கழுத்தில் பலத்த அடிபட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மின்மாற்றியுடன் மோதியதால் வண்டி தீப்பற்றி பெரும் சுவாலையுடன் எரிந்தது. வண்டி பல தடவைகள் தடம்புரண்டதால் அதன் கதவுகளை திறக்க முடியவில்லை. இருப்பினும் முன்னிருக்கையில் இருந்த திருமதி சுதர்சன் மிகுந்த எரிகாயங்களுடன் வண்டிக்கு வெளியே எடுக்கப்பட்டார். எடுக்கப்பட்டவர் தனது கணவன் பின்னிருக்கையில் இருப்பதாகவும் சகோதரன் சாரதியின் இருக்கையில் இருப்பதாகவும் தெரிவித்தார். தன்னைக் காப்பாற்றுமாறு மணிவண்ணன் குரல் எழுப்பிய போதும் தீ ஆக்ரோசமாக இருந்ததால் அவரை நெருங்க முடியவில்லை என திருமதி சுதர்சனைக் காப்பாற்றியவர்கள் தெரிவித்தனர். திருமதி சுதர்சனின் இடுப்புக்கு கீழ் எரிகாயங்கள் ஏற்பட்டது. அவரது வலது கன்னமும் எரிகாயங்களுக்கு உள்ளானது.

மணிவண்ணனின் உடல் மிகவும் எரிந்த நிலையில் மீட்கப்பட்டது. அவரது இறுதிக் கிரியைகளின் போது கூட அவரது உடல் பேழைக்குள் மூடியே வைக்கப்பட்டது. காவல் துறையினரின் விசாரணைகளுக்காக சம்பவம் நடந்து சில வாரங்களின் பின்னரே உடல்கள் கையளிக்கப்பட்டது. மேலும் மயக்கத்தில் இருந்த திருமதி சுதர்சனின் வாக்கு மூலத்திற்காகவும் காவல்துறையினர் காத்திருக்க வேண்டி இருந்தது. காவல்துறையினர் மிகவும் ஒத்துழைப்புடன் தமது கடமையில் ஈடுபட்டதாக யோகராஜா எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

இந்தக் கொடூரமான விபத்தில் பலியான மணிவண்ணனுக்கு நான்கு வயதிலும் இரண்டு வயதிலும் இரு குழந்தைகள் உண்டு. மற்றையவரான சுதர்சனுக்கு 14, 12, 8 வயதுகளில் மூன்று குழந்தைகள் உண்டு. திருமதி சுதர்சனும் மருத்துவ மனையில் உள்ள நிலையில் இலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்ட அவரது தாயும் சகோதரங்களும் குழந்தைகளைப் பார்க்கின்றனர். தமது தந்தையரை இழந்த இக்குழந்தைகள் மீதும் அவர்களது தாய்மார் மீதும் அனைவரது அனுதாபமும் கவனமும் மையப்பட்டு இருக்கிறது. மணிவண்ணனுக்கும் சுதர்சனுக்கும் முன்னால் ஒரு நல்ல எதிர்காலம் இருந்த நிலையில் அவர்களது மறைவை தங்களால் ஜீரணிக்க முடியவில்லை என்கிறார் யோகராஜா.

# பிரான்சு நாட்டு ஜோடிக்கு ஸ்ரீரங்கத்தில் இந்து முறைப்படி திருமணம் புரோகிதர்கள் மந்திரம் ஓத மாப்பிள்ளை தாலி கட்டினார்

தமிழ் நாடு - ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கத்தில் பிரான்சு நாட்டு ஜோடிக்கு நேற்று இந்து முறைப்படி திருமணம் நடந்தது. புரோகிதர்கள் மந்திரம் ஓத பட்டு வேட்டி சட்டை அணிந்த மணமகன், பட்டுச்சேலை கட்டிய மணமகளுக்கு மாலை மாற்றி தாலி கட்டினார். இந்திய கலாசாரம்

இந்தியாவின் கலை, பண்பாடு, கலாச்சாரம் உறவு முறைகள் மீது மதிப்பும், மரியாதையும் கொண்ட வெளிநாட்டவர்கள் அவற்றை நேரில் கண்டு களித்திட, இந்தியாவுக்கு அடிக்கடி சுற்று பயணம் செய்வது வழக்கம். குறிப்பாக இந்திய சிற்பக் கலையை கண்டு மயங்காத வெளிநாட்டவர்களே இல்லை என்று கூறலாம்.

இந்திய கலாசாரத்திலும், சாஸ்திர சம்பிராதயங்களிலும் ஆர்வம் கொண்ட பல வெளிநாட்டவர்கள் இந்தியா விலேயே தங்கி விடுவதும் உண்டு. வெளிநாட்டு ஜோடி

அதன்படி பிரான்சு நாட்டை சேர்ந்த காதல் ஜோடி நேற்று ஸ்ரீரங்கத்தில் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டனர். பிரான்சு நாட்டில் உள்ள டிராஸ்பர்க் நகரைச் சேர்ந்தவர்கள், எரிக் லீப்ரு (வயது 38) ஸோபி போஜியா (வயது 32) இருவரும் கிரேவ் என்ற நிறுவனத்தில் ஒன்றாக பணிபுரிந்து வந்தார்கள். இருவரும் இதற்கு முன் இந்தியாவிற்கு 3 முறைகள் வந்து பல்வேறு பகுதிகளை யும் சுற்றிப்பார்த்துள்ளனர். அப்போது இந்தியாவின் கலாசாரம் மற்றும் உறவு முறைகள் அவர்களை பெரிதும் கவர்ந்தது. குறிப்பாக இந்து திருமண முறை அவர்களை பெரிதும் கவர்ந்து விட்டது. எனவே அவர்கள் இந்து முறைப்படி திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள். தாலி கட்டினார்

அதன்படி அவர்கள் பிரான்சில் இருந்து


(தொடர்ச்சி கடைசி பக்கம்)



Coach Hire
35 இருக்கைகள் கொண்ட கோச் வாகனம் வாடகைக்கு உள்ளது. சீட் பெல்ட் மற்றும் டிரைவர் வசதியுடன் கிடைக்கும். மேலதிக விவரங்களுக்கு உடனே அனுகவேண்டிய தொலைபேசி எண்
020 8952 7775
Hall Hire

திருமணம், பிறந்தநாள் வைபவங்கள், மீட்டிங்குகள், கலை-கலாச்சார நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், மற்றும் இதர வைபவங்களுக்கு பாக்ஸ் ஒபீஸ், 200க்கும் மேற்பட்ட இருக்கை வசதி, 350பேருக்குறிய கொள்ளளவு, அன்மையில் புதுப்பிக்கப்பட்டதும், டாய்லட், ஒலிபெருக்கி இயந்திரங்கள், சிறப்பு அதிக ஒளி-விளக்குகள், சீறியல் அலங்கார விளக்குகளுடன் முதல் மாடியில் அமைந்துள்ள அருமையான இந்த ஹாலை புக் செய்ய நாடுங்கள் 020 8905 7775
(விதிமுறை: மாமிச உணவு, மதுபானம் அருந்துதல், உள்ளுக்குள் புகைபிடித்தல் தவிற்க வேண்டும்.)


NEW DELUXE BLEND
KUCHH NAI®
SCOTCH WHISKY
"NOTHING" Tastes Better
"மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் குச் நய் விஸ்கி"
TRADERS WELCOME
All other products also at wholesale prices
DRINKS ENTERPRISE
Cash & Carry Ltd.
Please call us on
020 8893 6000
Fax: 020 8893 5943
email: sales@drinks-enterprise.com
Lion House, Bridge Road, Southall, Middx. UB2 4AB

Quality Floor at Competitive Price at
Hardwood & Laminate Flooring Centre
306 Honeypot Lane
Stanmore
020 8204 2333

Unique Jewellers
Dealers in
22Ct Gold Jewellery, Diamond and White Gold always in Stock.
020-8606 9768
020-8574 3636
79 Western Road, Southall,
Middx. UB2 5HQ
London

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS gifts Souvenirs and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

# அநியாய விலையில் பயணச்சீட்டுக்கள்

கொழும்பில் உள்ள விமானச் சீட்டு முகவர்கள் தவறான தகவல்களை வழங்கி பணம் பறிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. இலங்கையில் இருந்து பிரித்தானியாவிற்கு வரும் புலம்பெயர் தமிழர்களின் குறிப்பாக வயதான பெற்றோருக்கு விமான பயணச் சீட்டு ஒழுங்கு செய்யும் கொழும்பு முகவர்களே இந்த பகற்கொள்ளையில் ஈடுபடுவதாக அண்மையில் இலண்டன் வந்துள்ள பத்மாவதி தம்பிராஜா(58) தெரிவிக்கிறார். தங்கள் அறியாமையையும் அவசரத்தையும் பயன்படுத்தி இந்த முகவர்கள் பணம் பண்ணுவதாகக் குறிப்பிட்ட இவர் வெளிநாட்டில் தங்கள் பிள்ளைகள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை இந்த முகவர்கள் தட்டிப் பறிப்பதாகக் கூறினார்.

கொழும்பில் இருந்து ஜேர்மனுக்கும் பின்னர் இலண்டனில் இருந்து கொழும்புக்குமாகவே ஓராண்டுக்குரிய பயணச் சீட்டு தயாரிக்கும்படி கேட்கப்பட்டதாகத் தெரிவித்தார் பத்மாவதி. மேலும் ஜேர்மனியில் ஒரு ஞாயிற்றுக் கிழமை சென்று இறங்கும் வகையில் ரிக்கற் செய்யும் படி தனது கடவுச்சீட்டை தான் கொட்டகெனாவில் உள்ள புளுமெண்டல் வீதியில் தங்கியிருந்த வீட்டுக்காரப் பெண்ணிடம் கையளித்திருக்கிறார் அந்த வயதான தாயார். கடவுச் சீட்டில் ஜேர்மனுக்கு 3 மாத விசாவும் இலண்டனுக்கு 6 மாத விசாவும் வழங்கப்பட்டு இருந்தது. அவர்கள் ரிக்கற் செய்து கொடுத்த பின்னர் வெளிநாட்டில் பத்மாவதியின் பிள்ளைகளுக்கும் அவர்கள் கேட்டபடியே ஒருவருட ரிக்கற் செய்ததாகவும் ஓகஸ்ட் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவர் ஜேர்மன் பிராங்பேட் விமான நிலையத்திற்கு வருவார் என்றும் அவ்வீட்டுக்காரப் பெண் தெரிவித்து இருக்கிறார். மேலும் கோலாலம்பூர் விமான நிலையத்தில் ரான்சிற்றின் போது அவருக்கு உதவி செய்ய ஒருவரை ஒழுங்கு செய்திருப்பதாகவும் அப்பெண்மணி தெரிவித்தார். அதற்கு அவர்கள் கேட்டுக் கொண்டபடி 85,000 ரூபாய் வழங்கப்பட்டது. அச்சமயம் இலண்டனில் முகவராக இருக்கும் பரமேஸ்வரன் அதே ரிக்கற்றை 70,000 ரூபாய்க்கு செய்ய முன்வந்திருந்தார். இருந்தாலும் கொழும்பில் வீட்டுக்காரப் பெண் முன்வந்ததால் அதனைப் விலை வித்தியாசத்தைப் பெரிது படுத்தாமல் அவரிடமே அதனை விட்டுவிட்டார்கள்.

ஆனால் அப்பெண் உறுதி அளித்தபடி வயாதான மொழி புரியாத தயாருக்கு ரான்சிற்றில் யாரும் உதவவில்லை. மேலும் உறுதி அளித்தபடி அவ்விமானம் ஞாயிற்றுக் கிழமை பிராங்பேர்ட்டுக்கு போகாது என்பதும் கோலாலம்பூரில் வைத்து தெரியவந்தது. தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்ட அத்தாயார் அங்கிருந்த தமிழ் பணியாளர் ஒருவரின் உதவியுடன் ஜேர்மனுக்கு தொடர்பு கொண்டு மறுநாள் தான் விமானம் ஜேர்மன் வரும் என்பதைத் தெரியப்படுத்தினார். இத்துடன் இந்தச் சிக்கல் நிற்கவில்லை.

ஜேர்மன் வந்தவரின் ரிக்கற்றை அங்கு பார்த்தபோது ரிக்கற் 3 மாதகாலத்தில் காலாவதியாவது தெரியவந்தது. இலண்டனில் உள்ள மலேசிய விமான நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் 3 மாதத்திற்குத் தான் ரிக்கற் செய்த விடயம் தெரியவந்தது. இப்போது அந்த ரிக்கற்றின் காலத்தை இன்னும் 3 மாதகாலத்தால் அதிகரிக்க 20,000 ரூபாய் செலுத்த வேண்டும் என விமான நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

இது பற்றி வீட்டுக்காரப் பெண்ணிடம் கேட்டதற்கு கொழும்பு செல்வா ரவல்ஸ் நிறுவனத்தில தான் ரிக்கற் செய்ததாகவும் சக்தி என்பவர் மூலமாகவே அதனைச் செய்ததாகவும் அவர் தெரிவித்தார். செல்வா ரவல்ஸ் சக்தியிடம் கேட்டதற்கு அப்பெண் 3 மாத ரிக்கற்தான் செய்யும்படி கேட்டதாகவும் அதற்கு 70,000 ரூபாய் தான் வாங்கியதாகவும் தெரிவித்தார். இருவரும் ஒவ்வொருவர் மீது மாறி மாறி குற்றம் சாட்டினர். 35,000 ரூபா மேலதிகமாகச் செலுத்தியும் அவ்வயதான தாயார் அலைக்கழிவின்றி பயணிக்க முடியவில்லை. கொழும்பில் உள்ள இந்த வீட்டுக்காரர்களதும் முகவர்களதும் பகற்கொள்ளைகள் பற்றி விழிப்புடன் இருக்கும் படி அத்தாயார் புலம்பெயர் தமிழர்களை எச்சரித்தார்.

# வளரும் இந்தியக் கணணித் துறை

இந்தியாவின் கணணித் தொழில்நுட்ப ஏற்றுமதி 6.2 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற்று முக்கிய ஏற்றுமதித் துறையாக திகழ்கிறது. 900 க்கும் மேற்பட்ட சொப்வெயர் ஏற்றுமதி நிறுவனங்களில் 415,000 வரையானவர்கள் பணிபுரிகின்றனர். வளரும் சந்தையில் இவ்வகையான கணணிச் சேவைகள் அடுத்த ஆண்டு(2004ல்) 543 பில்லியன் அமெரிக்க டொலராக உயரும் என Gartner Dataquest என்ற நிறுவனம் எதிர்வு கூறியிருக்கிறது.

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், பிரிடிஷ் எயர்வெய்ஸ் ஆகிய நிறுவனங்கள் தமது தொலைபேசிச் சேவை மையங்களை இந்தியாவுக்கு மாற்றியதால் தமக்கிடையே சில நூறு மில்லியன் டொலர்களை வெற்றிகரமாக மீதப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் சிற்றி பாங்க், டெல் கொம்புயூட்டர்ஸ், ஒறாக்கிள், லுப்தான்சா ஆகிய நிறுவனங்களும் இந்தியாவில் மையங்களை அமைத்துள்ளன.

தொலைத்தொடர்பில் ஏற்பட்ட நவீன மாற்றங்கள் அதாவது Voice over the Internet Protocol, குறைந்த கட்டணம், இலகுவான தெளிவான தொடர்பு ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதனால் டெல்லியில் பணிபுரிபவர் அதே கட்டிடத்திலோ அல்லது இலண்டனிலோ உள்ள சக பணியாளருடன் தொடர்பு கொள்வதற்கு ஒரே எண்ணிக்கையான எண்களையே அழுத்த வேண்டி இருக்கும். கட்டணம், தொடர்பு, தெளிவு என்பவை ஒரே மாதிரியானவையாகவே இருக்கும்.

இதனால் மேற்கு நாட்டு நிறுவனங்கள் குறைந்த சம்பளத்தில் இந்தியப் பணியாளர்களை இந்தியாவிலேயே வேலைக்கு அமர்த்துகின்றன. இந்தியப் பட்டதாரிகளை இந்நிறுவனங்கள் மாதம் 10,000 - 12,000 இந்திய ருபாய்க்கு (£130 - £160) அமர்த்தக் கூடியதாக உள்ளது. இதே தகுதி உடைய பட்டதாரியை இலண்டனில் பணியில் அமர்த்த 10 மடங்கு அதிக சம்பளம் வழங்க வேண்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அனுகூலங்களால் நட்ட ஈட்டு விண்ணப்பப் படிவங்கள் மற்றும் கிறடிற் காட் படிவங்களை பரிசீலிப்பது, கணக்குகள், நுகர்வோரிடம் பொருட்களுக்கான கட்டளைகளை பெறுவது, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது போன்ற விடயங்களை வங்கிகள், விமானச்சேவை நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், கிறடிட்காட் நிறுவனங்கள் இந்தியாவிலே உள்ள தொலை மையங்களினூடாக மேற்கொண்டு வருகின்றன.

தற்போது சர்வதேச தொலைபேசிச் சேவையின் 10 வீதமே VoIPன் ஊடாக நடைபெறுவதாக இந்திய இணையத் தள சேவை வழங்கும் கூட்டமைப்பின் செயலாளர் அமிதாப் சின்ஹா தெரிவிக்கிறார். அரசு VoIP யை பயன்படுத்துவதில் கட்டுப்பாடு விதித்து உள்ளதாக குறிப்பிடும் சிங்ஹா கணணித் தொழிற்துறைக்கு மட்டுமே அரசு அனுமதி கொடுத்திருப்பதாகவும் VoIPயை பயன்படுத்தி வெளிநாட்டில் உள்ள கணணியுடனோ அல்லது தொலைபேசியுடனோ மட்டுமே தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். கணணியில் இருந்து தொலைபேசியுடன் தொடர்பு கொள்வது இந்தியாவில் தடைசெய்யப்பட்டு உள்ளது. அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் வளர்ந்த நாடுகளில் உள்ள சாதாரண அலுவலகத் தொழிலாளரின் தொழில் இந்தியாவில் அமுலில் உள்ள இந்தத் தடையிலேயே தங்கி உள்ளதாகத் தெரிகிறது.

# இந்தியாவை கணணிப்படுத்த பில்கேற் முயற்சி

நவம்பர் நடுப் பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு இருந்த மைக்குரோ சொப்ற் பில் கேற் அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்திய கணணி அறிவை வளம்படுத்த £250 மில்லியனை வழங்கி இருக்கிறார். இவ் உதவித் தொகையில் இந்திய மாநிலங்களில் 10 கணணிக் கல்வி மையங்கள் அமைக்கப்பட இருக்கிறது. மேலும் ஒரு கல்வித் திட்டத்தின் கீழ் 80,000 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கவும் 3.5 மில்லியன் அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கு கல்வி வழங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. சர்வதேச கணணிச் சந்தை தற்போது பெருமளவில் இந்தியாவில் தங்கி நிற்பது நிரூபணமாகி வருகிறது.

மறுபுறம் இந்தியாவின் சிறந்த மருத்துவர்களும் முகாமையாளர்களும் தேர்ச்சியாளர்களும் இந்தியாவை விட்டு அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுக்கு வெளியேறுவதால் இந்தியாவுக்கு ஆண்டுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்படுவதாக ரைம்ஸ் ஒப் இந்தியா கட்டுரையாளர் ஜெய்ராம் ரமேஸ் தெரிவிக்கிறார். மேலும் அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் இந்தியாவின் 10 வீத தேசிய வருமானத்துக்கு ஈடான வருமானத்தை கொண்டிருப்பதாகவும் அக்கட்டுரை தெரிவிக்கிறது.

# ஏற்காடு மலையில் வினோதம் நிர்வாண பூஜை நடக்கிறதா?

தமிழ்நாடு..ஏரிகாடு என்ற மலை சூழ்ந்த கிராமம் வெள்ளையர்களின் காலடி பட்ட பிறகு ' ஏற்காடுபீ என்ற உல்லாசமலை வாசஸ்தலமானது. வான் முட்ட உயர்ந்து நிற்கும்மலை சிகரங்கள், பசுமை நிறைந்தபள்ளதாக்குக்கள் உல்லாச பயணிகளின் இதயங்களைகொள்ளைகொள்கின்றன.ஆனால் அந்த மலை சிகரங்களுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும்பின்னணியில்எத்தனை சோகங்களும், கதைகளும்மறைந்து கிடக்கின்றன என்பது யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

சேலத்தில் இருந்து 26 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஏற்காடு மலையில் 67 கிராமமக்களின் வாழ்வும் பின்னி பிணைந்து கிடக்கிறது. அவை 9 ஊராட்சி உள்ளடங்கிஇருக்கிறது. அந்த 9 ஊராட்சிகளில் ஒன்றான வெள்ளக்கடை கிராமம் இன்று தமிழ்நாடுமுழுவதும் கேள்விக் குறி யாக மாறி உள்ளது.

ஏற்காட்டில் இருந்து 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வெள்ள கடை ஊராட்சி 6 கிராமங்களை கொண்டது.அவைகளில் 4 கிரா மங்களுக்கு போக்குவரத்து வசதியே கிடையாது.

அந்த கிராமம் இன்று பத்திரி கைகளில் தலைப்பு செய்தியாகி விட்டது. அங்குள்ள அம்மனுக்கு பெண்கள் அம்மன (நிர்வாண) பூஜை நடத்துவதாக செய்தி பரவியதே காரணம்.

உண்மையிலேயே அங்கு நிர்வாண பூஜை நடக்கிறதா? என்று ஆராய்ந்த போது பல உண்மைகள் வெளியாயின. அடிப்படை வசதிகளே இல்லாமல் அல்லல்படும் கிராமங்கள் ஏராளம். ஆனால் அத்தனைவசதிகளையும் கொண்டு, கல்வியில் விழிப்புணர்வும்,மகளிர் சுய உதவி குழுக்களும் கொண்ட இந்த கிராமத்தில் நிச்சயமாக நிர்வாணபூஜை நடைபெற வாய்ப்பு இருக்குமா? அல்லது கற்பனையில் உருவான கட்டுக் கதையின் காரணமாக ஏற்பட்ட களங்கம்தானா?என்றெல்லாம் யோசிக்கத் தோன்றியது.

உண்மையை அறிந்து உலகுக்கு பறைசாற்ற வெள்ளகடைக்கு விரைந்தோம். அங்கு மாவட்ட கலெக்டரின் அறிவுரைப் படி ஏற்காடு போலீஸ் இன்ஸ் பெக் டர் மோகன்ராஜ் ஊருக்கு வெளியே காவலர்களுடன் பாது காப்பிற்காக நின்று கொண்டிருந் தார். அவரிடம் கேட்டபோது ஆண்கள் யாரும் உள்ளே செல்ல கூடாது என்று நீண்ட மரம் ஒன்றைதடுப்புக்காக போட்டி ருப்பதைப் காண்பித்தார். பூஜையைக் கண்காணித்து உண்மையைக்கண்டறிய ஒரு பெண் சப்-இன்ஸ்பெக்டருடன் மூன்று பெண் போலீசாரையும் ஊருக்குள் அனுப்பியிருப்பதாகக் கூறினார்.

பின்னர் 36 வயது கொண்ட அண்ணாதுரை என்ற வாலிபர் தன்னைவெள்ளக்கடைஊராட்சி தலைவர் என்று அறிமுகப்படுத்தினார்.தவறான செய்திகளால் ஊரே கவலையில் உள்ளது என்று நடந்து கொண்டிருந்த பூஜையைப்பற்றி விரிவாகச் சொன்னார்.

ஆண்டாண்டு காலமாக எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கும், திறந்த வெளியில் காளியம்மனுக்கும் பொங்கல் நாளையொட்டி பெண்களால் பூஜைகள் நடத்தப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. அதே போல் இந்த ஆண்டும் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த பூஜையில் சாமிக்கு படைப்பதற் காகவும், அந்நாளில் சாப்பிடு வதற்காகவும் கேழ்வரகு ரொட்டியை மக்கள் தயார் செய்து வைத் திருப்பார்கள். முதலில்விபரம் தெரிந்த ஆண் குழந்தைகள், வாலிபர்கள், ஆண்கள் அனைவரும் ஊருக்கு வெளியே 11 மணியள வில் சென்று விடுவார்கள். 12 மணிக்கு காளிம்மன் பூஜை ஆரம் பமாகும் என்று சொன்னார். பூஜையின் போது கேழ்வரகு ரொட்கள்,தேங்காய்,பழம், பூமாலைகள் காளியம் மனுக்கு படைக்கப்படும். பின்னர் அம் மன் கோவிலில் பூஜை நடத்தப்படும்.

பெண்களால் மட்டுமே நடத் தப்படும் இப் பூஜைகளில் ஆண்கள் பங்கேற்கக்கூடாது என்பது அந்த காலத்தில் இருந்தே கடை பிடிக்கப்பட்ட ஊர் வழக்கம். அப்படி பூஜைகள்நடத்தப்பட்டால் தான் ஊர் மக்கள் நோய் நொடியில்லாமல், பேய்பிசாசுத் தொல்லைகள் ஏற்படாமல் சந் தோஷமாகஇருப்பார்கள்என்றும், ஊருக்கு ஒன்றாக மழை வளம் கிடைக்கும், விவசாயம் செழிக்கும் என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதனால் தான் ஆண்கள் ஊருக்கு வெளியே செல்கின்றார்கள்.

மேற்கண்ட தகவலை அண்ணாத்துரை கூறிய போது, தர்மகர்த்தா பொண்ணாச்சி (வயது 50) உடனிருந்தார். அவர்தனக்கு விவரம் தெரிந்த காலத்தில் இருந்தே இப்பூஜைகள் எங்கள் ஊரில் நடைபெறுவது எனக்குத் தெரியும்,ஆனால் பூஜையின் போது ஆடையில்லாமல் பெண்கள் பூஜை நடத்துவதாக வெளியில் சொல்வதும் எழுதுவதும் புபொய்பூ என்று கூறினார்.

அச்சமயம் உணர்ச்சி பொங்க, கொந்தளிப்புடன் பெண்கள் கூட்டம் பொங்கி எழுந்து சரமாரி புகார்களை அள்ளி வீசினார்கள். புனிதமாக எங்கள் ஊரில் நடைபெறும் பூஜையை கேவலமாகப் பேசுகின்ற, எழுதுகின்ற, மனிதர் களையும், பத்திரிகைகளையும் வன்மையாகக்கண்டிக்கிறோம். ஆங்கிலப் படத்தைப் பார்த்து ரசிக்கும் கூட்டமும்,அசிங்கமாக நடக்கும் ஆண்களும்தான் பு நிர்வாணப் பூஜைபூ என்ற அநாகரீக வார்த்தையைப் பயன்படுத்து கிறார்கள். அப்படி ஒரு பூஜை எந்த காலத்திலும் எங்கள் ஊரில் நடைபெற்றது கிடையாது. இனி மேல் அப்படி ஏதாவது வீண் வதந்திகளை கிளப்பினால் பல போராட்டங்களை நடத்துவோம்.

அவப்பெயர் ஏற்பட சம்மந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடருவோம்என்று அக்னியாய் கொதித்தார்கள். உணர்ச்சி பெருக்குடன், கோபத்தீயில் கக்கிய பெண்களின் வார்த்தை களில் உண்மை களைக்காண முடிந்தது. கற்பனையாக கதை கட்டி, பெண்களை களங்கப்படுத்துகிறார்களே என்று கதறிக் கூறும் போது பெண்களின் மேல் வீண் பழிஎன்றே தோன்றுகிறது.

அப்படியிருக்க, காவலில் இருந்து பெண் போலீசார் பூஜையை முடித்து வெளியில் வந்தனர்.பெண் போலீஸ் சப் இன்ஸ் பெக் டர் தங்கமணியிடம் விசாரித்த போது,வெளியில் கூறப்படுவது போல் நிர்வாணப் பூஜை நடைபெற வில்லை. திறந்த வெளியில் காளியம்மனுக்கு பூஜை செய்யப் பட்டது. குழந்தைகள் நடனம் ஆடினார்கள். ஆகாயத்தைப் பார்த்து பெண்கள் சாமி கும்பிட்டனர்கள். பின்னர் மாரியம்மன் கோவிலுக்கு பூஜை செய்தார்கள் என்று தெரிவித்தார்.

பூஜையின் போது ஆண்களை அனுமதித்தால் அம்மனுக்கு கோபம் வந்துவிடும். பூஜையை ஆண்டு தோறும் நடத்தியே ஆக வேண்டும். அதே நேரம் நிர்வாண பூஜை நடைபெறவில்லை என்று உலகுக்கு நிரூபிக்க வேண்டும். ஊர்பெண்களுக்கு தர்மசங்கடமான நிலை. பெண் போலீசாரின் சாட்சியம் மட்டும் தான் ஊர் பெண்களின் மானம் காக்கும் கவசம்.

இருந்தாலும் சந்தேகத்திற்குரிய காரணங்களை ஊர் தலைவர், தர்மகர்த்தா ஆகியோர்பேசிக் கொண்டிருக்கும் போது தெரிவித்ததாவது :-

பூஅம்மன் பூஜைபூ என்ற சொல்லும்,ஆண்கள் வெளியேற்றம் என்ற சொல்லும் மட்டுமே நிர்வாணப் பூஜை நடக்கிறது என்ற புரளிக்கு வித்தாக அமைகின்றது.

அந்த காலத்தில் பெண்கள் ரவிக்கை அணியும் பழக்கம் கிடையாது. அம்மனுக்கு பூஜை செய்யும்போது ஆண்களுக்கு முன்னால் ஆட வேண்டும். அதற் காகக் தயங்கிய பெண்கள் ஆண்களை ஊருக்கு வெளியில் நிற்க வைத்திருக்கலாம். நாளடைவில் அந்த உண்மை மறைந்து,ஆண் கள் பூஜையின் போது இருப்ப தால் அம்மனுக்கு கோபம் வரும். அதனால் அந்நேரம் ஆண்கள் ஊருக்கு வெளியே தான் இருக்க வேண்டும் என்ற

(தொடர்ச்சி கடைசி பக்கம்)

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

SOLICITORS

# சமூக விரோதி ஜெயதேவனின் முகமூடி கிழிந்தது

## சகுனிக்குப் பிடித்த சனி



குடிபோதையில் ஜெயதேவனின் கோலம்

சனியின் கிரகநிலை பற்றி அறியாத தமிழர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால் சகுனிக்கே சனி பிடித்திருக்கும் விடயம் சில இலண்டன் தமிழர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அண்மைக்காலமாக இலண்டன் தமிழர்களைப் பிடித்திருக்கும் சகுனி ஜெயதேவன் என்ற சமூகவிரோதி என்றால் அதில் எந்த மிகைப்படுத்தலும் இல்லை. தமிழ் சமூக அமைப்புகளுக்குள் ஜெயதேவனின் வருகை அவ்வமைப்புகளுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு என தமிழ் அமைப்புகளின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். தன்னை தமிழ் ஆர்வலனாக வலிந்து காட்டிக்கொண்டு அரசியலுக்குள்ளும் அமைப்புகளுக்குள்ளும் புகுந்த ஜெயதேவன் பதவியையும் பணத்தையும் கண்டு மதிகெட்டத்தனமாக சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டமை தற்போது ஜெயதேவனுக்கே வில்லங்கமாக அமைந்து உள்ளது.

1996ம் ஆண்டு தமிழ் அகதிகள் நடவடிக்கைக்கு குழுவிற்குள் நுழைய ஜெயதேவன் சூழ்ச்சிகளில் ஈடுபட்டதாக அகதிகள் நடவடிக்கைக்கு குழுவின் நீண்ட கால உறுப்பினர் உதயனுக்குத் தெரிவித்தார். அப்போது அதன் இணைப்பாளராக இருந்த தற்போதைய தமிழர் தகவல் நடுவத் தலைவரும் தமிழ் ஆர்வலருமான வரதகுமாரை ஒரு புலி எதிர்ப்பாலராகக் காட்டிக் கொண்டு அவருக்கு அரசியல் அழுத்தங்களைக் கொடுத்து அப்பதவிக்கு எந்தத் தகுதியும் அனுபவமும் அற்ற ஜெயதேவன் பின்கதவு வழியாக புகுந்து கொண்டதாக அவ்வுறுப்பினர் தெரிவித்தார். இதுவே ஜெயதேவன் என்ற புற்றுநோய் தமிழ் ஸ்தாபனங்களுக்குள் வளர ஆரம்பித்த முதற்கட்டம் என கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பல்லாயிரம் தமிழ் அகதிகளின் வழக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் அகதிகளுக்கு நாயகனாக இருந்த அந்த மூத்த ஆலோசகர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜெயதேவனின் பதவிக்காலத்தில் தமிழர் அகதிகள் நடவடிக்கைக் குழுவில் உதவி பெற்று வந்த தம்பிரட்ணம் மோகன் என்ற உடல் மற்றும் உள நலம் பாதிக்கப்பட்ட மனிதர் ஜெயதேவனின் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் அந்நோயாளிக்கு எந்த உதவியும் வழங்கக் கூடாது என்றும் ஜெயதேவன் கட்டளை இட்டு இருந்தார். அந்நோயாளிக்கு எதிராக பொலிஸில் பொய்ப் புகார் கூட ஜெயதேவன் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் தனது 40வது வயதில் அந்நோயாளி மரணமானார்.

அனுபவமும் தகுதியும் இன்றி பின்கதவால் பதவிக்கு வந்த ஜெயதேவனால் நீண்டகாலம் நிலைக்க முடியவில்லை. ஜெயதேவனுக்கும் பணியாளர்களுக்கும் இடையே விரிசல்கள் ஏற்பட்டது. நிர்வாகத்திற்கு ஜெயதேவன் தலையிடியானார். இறுதியில் 1997ல் தானாகவே பதவியில் இருந்து விலக ஜெயதேவன் நிர்ப்பந்திக்கப்பட்டார். TRAGயைப் பிடித்த சனியன் அவ்வளவு இலகுவாக விடவில்லை. ஜெயதேவன் வெளியேறும் போது அவ்வமைப்பு மூலம் தமிழ் அகதிகளுக்கு கிடைத்து வந்த உதவிகளுக்கும் நிதிக்கும் வேட்டு வைத்துவிட்டுச் சென்றார். மீளவும் அவ்வமைப்பை நிலைநிறுத்த பல மாதங்கள் எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அகதி அமைப்பில் இருந்து துரத்தப்பட்ட ஜெயதேவன் சும்மா இருக்கவில்லை. பதவிவெறியும் பணமோகமும் ஜெயதேவனை துறுதுறுத்தச் செய்தது. 1999ல் ஆரம்பிக்கப்பட்ட ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாகத்துக்குள் நல்ல பிள்ளை வேசம் போட்டு நுழைந்த ஜெயதேவன் படிப்படியாக நிர்வாகத்தை குடும்பச்சொத்தாக மாற்றினார். பொதுநலவிரும்பிகளை கலைத்து விட்டு தன் காலைச்சுற்றித் திரிபவர்களை நிர்வாகத்தில் நுழைத்தார். இதன் உச்சகட்டமாக நிர்வாகத் தலைவர் சிவராஜாவை பதவி விலக்கியதாக அறிவித்து £100,000 கணக்குக் காட்டாமல் அமுக்கினார். ஜெயதேவன் கோயில் உண்டியலைக் கூட வீட்டுக்கு கொண்டு சென்றார். 2002 மே மாதம் 10ம் திகதி நியாயம் கேட்கத் திரண்டு இருந்த 300 வரையான பக்தர்கள் முன்னிலையில் ஆண்டவனையே துடைப்பத்தால் அடிக்கப் பணித்து கூட்டத்தில் இருந்து ஜெயதேவனும் மைத்துனர் சௌந்தர்ராஜனும் தப்பி ஓடினர். இன்று இந்த ஊழல் பேர்வழிகளின் கையிலேயே அவ்வாலயம் உள்ளது.

கோயிலில் அடித்த பணத்துடன் திருப்திப்படுத்தாத ஜெயதேவன் தமிழர் வீட்டுவசதிக் கழகத்துக்குள்ளும் தகுதியும் அனுபவமும் இன்றி பின்கதவால் உள்ளே நுழைந்தார். ஜெயதேவனின் நுழைவுடன் வீட்டு வசதிக் கழகத்திற்கும் சனியன் பிடித்தது. ஏப்ரல் 17ம் திகதி திகனரநாதர் என்பவரால் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட வழக்கில் ஜெயதேவன் பின்கதவால் வந்த கதை தோலுரித்துக் காட்டப்பட்டது.

தமிழர் தகவல் நடுவத் தலைவர் வரதகுமாரை புலி எதிர்ப்பாளராகக் காட்டி வெளியேற்றிய ஜெயதேவன் 2001ம் ஆண்டு விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் தமிழர் வீட்டு வசதிக் கழகப் பணியாளர்கள் அவ்வமைப்புடன் தொடர்பு இல்லை என்று கையெழுத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு உள்ளார். மொட்டைக் கடிதங்களின் தந்தை என வர்ணிக்கப்பட்டு வரும் ஜெயதேவன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தத்துவ ஆசிரியருக்கு எதிராக துண்டுப்பிரசுரம் அடித்து இலங்கைத் தூதரகத்துக்கும் இலங்கையில் உள்ள ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளார்.

